Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


நாங்கள் தரத்திற்கும் நேரத்திற்கும் மதிப்புக் கொடுப்பவர்கள்

UNIT

கடைசிப் பக்கம் பார்க்கவும்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 19 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 20 (04.11.2004) வியாழக்கிழமை இதழ்: 36

# இந்திய இராணுவத் தளபதி ஓமந்தைக்கு நேற்று விஜயம்!

## முன்னணி நிலைகளைப் பார்வையிட்டார்



(வவுனியா)

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் உள்ள இராணுவத்தினரின் முன்னரங்க நிலைகளுக்கு, இந்திய இராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் என்.சி.விஜ் நேற்று விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டார்.

நேற்றுக்காலை வவுனியாவுக்கு விஜயம் செய்த அவர், வன்னிப் பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க, வன்னிப் பிராந்தியத்துக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகிந்த பத்தேவெல ஆகியோரை ஜோசப் இராணுவ முகாமில் சந்தித்து வன்னிப்பகுதி நிலைமை குறித்து விரிவாக ஆராய்ந்தார். இதன் பின்னரே ஓமந்தை முன்னணி நிலைகளை அவர் பார்வையிட்டார்.



படையினரின் முன்னரங்க காவல்நிலைகளில் இருந்து புலிகளின் முன்னரங்க காவல் நிலைகளை இந்திய இராணுவத் தளபதிக்கு சுட்டிக்காட்டுகிறார் இலங்கை படையதிகாரி ஒருவர்.....!

## ஆளுநர் அசோக ஜெயவர்த்தன குடாநாட்டுக்கு இரகசிய விஜயம்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன, நேற்று யாழ். குடாநாட்டுக்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டதாகத் தெரிய வருகிறது.

நேற்றுக்காலை பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த ஆளுநர் - பலாலி இராணுவத் தலைமையகத்தில் குடாநாட்டுக்கான படைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் மற்றும் இராணுவ, பொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுநடத்தினார்.

இதன்பின்னர் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் வாகன பவனியாக விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்தார்.

இவர் சில முக்கிய இராணுவ முகாம்களுக்கும் விஜயம் செய்ததாகக் கூறப்படுகிறது. அத்துடன், தெல்லிப்பளை வைத்தியசாலை, தேசிய கல்வியியற் கல்லூரி ஆகியவற்றுக்கும் இவர் விஜயம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

எனினும், இவர் யாழ்.அரச செயலகத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ரோக்கியோ, ஒஸ்லோ தீர்மானங்களை வைத்து விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்த முடியாது!

## இறுதித்தீர்வுக்கான சந்தர்ப்பம் கைநழுவிச் செல்கிறதா?

### அச்சம் தெரிவிக்கிறார் ஆர்மிரேஜ்

(நியூயோர்க்)

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் இறுதித் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கான அரிய சந்தர்ப்பம் கைநழுவிச் செல்கின்றதோ என்று தான் அச்சமடைவதாக அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் றிச்சர்ட் ஆர்மிரேச் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்ற சிறப்பு நிகழ்ச்சி ஒன்றுக்கு அனுப்பிவைத்துள்ள வீடியோ ஒளிநாடாவி



## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

(லண்டன்)

உதவி வழங்கும் நாடுகள் சமாதான முயற்சிகள் மற்றும் இரு தரப்பினரையும் சமாதானப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வைக் காணும் விடயத்துக்கு ஆதரவு வழங்கலாமே தவிர, இந்த வழியால் சென்றுதான் அரசியல் தீர்வை அடைய வேண்டும் என்று நிபந்தனை விதிக்க முடியாது என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நெற் இணையத் தளத்துக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

னிட்டு கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக்த்தில் இடம்பெற்ற சிறப்பு நிகழ்ச்சி ஒன்றுக்கு அனுப்பிவைத்துள்ள வீடியோ ஒளிநாடாவிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஒளிநாடாவில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த இரண்டு தசாப்தத்துக்கும் மேலாக இலங்கையில் நிலவிவந்துள்ள யுத்தத்தால் 64,000 பொதுமக்கள் கொல்லப்படுள்ளதாக

(12 ஆம் பக்கம் பார்க்க)



தமிழ்நெற் இணையத் தளத்துக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

2002 ஆம் ஆண்டு நவம்பரில்நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடந்த மாநாட்டிலோ அல்லது 2003 ஆம் ஆண்டு ஜூனில் ரோக்கியோவில் நடந்த மாநாட்டிலோ எடுக்கப்பட்ட தீர்மானத்தை வைத்துக்கொண்டு அதன்மூலமே அரசியல்தீர்வுக்குச் செல்லவேண்டுமென எமது அமைப்பை கட்டுப்படுத்த முடி

# அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் தமிழ்ச்செல்வனை சந்திக்க இணக்கம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையை அகற்றும் வகையில், மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து உரையாடவுள்ளனர்.

நேற்று கொழும்பில் கூடிய சர்வமதத் தலைவர்களின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்கர்களை தலைவர்களாகக் கொண்ட சர்வமதத் தலைவர்கள் - தமிழீழ அரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை சந்திக்க உள்ளனர்.

ஆனால் இந்தச் சந்திப்புக்கான திகதி இதுவரையில் குறிக்கப்படவில்லை.

**மூப்பின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்கான 4000 பேரின் பட்டியல் தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்று வெளிவரவில்லை. நாளை வெளிவரும்.**

# அமெரிக்க ஜனாதிபதியாக புஷ் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்!

(நியூயோர்க்)



அமெரிக்க ஜனாதிபதியும், குடியரசுக் கட்சி வேட்பாளருமான ஜோர்ஜ் புஷ், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இறுதிக் கட்டமாக வரவுள்ள ஒகியோ மாநில தேர்தல் முடிவுகளின்படி அங்கு 99 சதவீத வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட நிலையில் ஜோர்ஜ் புஷ் தன்னை எதிர்த்துப்போட்டியிடும் ஜோன் ஹெரியைவிட ஒரு லட்சத்து 34 ஆயிரம் வாக்குகளால் புஷ் முன்னிலையில் உள்ளார்.

இந்தத் தேர்தலில் ஜோன் ஹெரி தனது தோல்வியை உணர்ந்து ஒப்புக்கொள்ளும்வரை ஜனாதிபதி புஷ், தான் வெற்றிபெற்றதை அறிவிப்பதை தாமதப்படுத்தியுள்ளாரென அமெரிக்க அதிகாரியான அன்ட்ரூ காட் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

## பண்ணிசைப்போட்டி பிற்போடப்பட்டுள்ளது

தீவகவலய கல்வித்திணைக்கள ஊர்காவற்றுறைக் கோட்டம் இன்று நடாத்தவிருந்த பண்ணிசைப்போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிறபோடப்பட்டுள்ளதாக தீவக வலயத்தினர் அறிவித்துள்ளனர். (52)

## மனித உரிமைகள் கருத்தரங்கு இன்று கொடிகாமத்தில்

சிறுவர் நன்நடத்தை திணைக்களம் யுனிசெவ் அனுசரணையுடன் சிறுவர் உரிமை பற்றிய கருத்தரங்கு இன்று தென்மராட்சி பிரதேச செயலகத்தின் கொடிகாமம் உபஅலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

சிறுவர் உரிமை பற்றிய கருத்தரங்கு நேற்றுமுன்தினம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதில் வெளிக்கள உத்தியோகத்தர், மற்றும் கிராமசேவகர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்கு கொண்டனர்.

இதேவேளை மனித உரிமைகள் தொர்பான கருத்தரங்கு ஒன்று இன்று வறணி மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது. (29)

## அபிராமி பராமரிப்பு நிலையத்தின் ஆண்டு விழாவும், கலைநிகழ்வும்

அல்லாரை தெற்கு அபிராமி பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின முதலாம் ஆண்டு நிறைவு விழாவும், கலை விழாவும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு, முன்னாள் அதிபர் க.சந்திரசேகரா தலைமையில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஶ்ரீநிவாசன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா, தென்மராட்சி கோட்டப் பொறுப்பாளர் செ.கலைவாணன், சமூகசேவை உத தியோகத்தர் எஸ்.ஞானவேல், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் எஸ்.சிவகரன், சேவாலங்கா மாவட்டப பணிப்பாளர் எஸ்.ஆனந்தராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (25)

## நீரில்மூழ்கி வயோதிபர் மரணம்

கோயிலாக்கண்டி கடல் நீரேரியில் குளிக்கச் சென்ற வயோதிபர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் கோயிலாக்கண்டி பகுதியில் இடம்பெற்றது.

கைதடி நாவற்குழியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அரசமுடி (வயது 78) என்பவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்தார். (29)

## சமூகக்கல்விப் பாட செயலமர்வு

யாழ்.கல்வி வலயம் நடாத்தும் தரம் 7 ஆங்கில மொழிமூல சமூகக் கல்விப் பாடத்திற்கான செயலமர்வு நாளை முதல் மூன்று தினம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் காலை 9.00 மணிதொடக்கம் நடைபெறும். மேற்படி வகுப்பில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் சமூகமளிக்குமாறு யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்

*(முன்னாள் அதிபர் - யாழ்.புனித அந்தோனியார் கல்லூரி, இளைப்பாறிய கோட்டக்கல்வி அதிகாரி - ஊர்காவற்துறை)*

கரம்பன் கிழக்கு, ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம் (இளைப்பாறிய கோட்டக்கல்வி அதிகாரி) 2004.11.03 புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - விசாலாட்சி தம்பதிகளின் பாசமிகுமகனும், செறின் யோகன்னா தர்மபாலியின் (உபதபால் அதிபர்) அன்புக்கணவரும், உமையாள் (கனடா), ஜெயகாந்தன் (மூன்றாம் வருடம் - நுண்கலைப்பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்), ஶ்ரீகாந்தன் (இறுதியாண்டு வணிகத்துறை - யாழ்.பல்கலைக்கழகம்), காயத்திரி (லண்டன்), நிறஞ்சினி (கொழும்பு பல்கலைக்கழகம்), றூபினி, தயாளினி, உதயகாந், உஷானி, பாலகாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சோதிமதி, துரைசிங்கம், தனபாலசிங்கம் (ஜேர்மன்), சரஸ்வதி (பிரான்ஸ்), திலகவதி, குலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகதீபன், நிஷங்கன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநாத்தின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 2004.11.04 பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, கரம்பன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
திருமதி S.D.இரத்தினசிங்கம் (மனைவி)
கரம்பன் கிழக்கு.
ஊர்காவற்துறை.

## யாழ். மாவட்டத்தில் / கிளிநொச்சி மாவட்டத்தில்

நமது ஈழநாடு — தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, தமிழ் மாணவர் ஒன்றியம் ~ யாழ். மாவட்ட வலயக் கல்விப் பணிமனைகளின் இணைந்த ஆதரவுடனும்,

தமிழ் மாணவர் ஒன்றியம் ~ கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை ஆகியவற்றின் இணைந்த ஆதரவுடன்

**க.பொ.த (சா/த) - 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை (பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும் யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் இலவசமாக நடாத்தவுள்ளது.**

### யாழ். மாவட்டத்திற்கான கருத்தரங்கு நிலையங்கள்

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தென்மராட்சி வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி.
02. யா/ வரணி மகாவித்தியாலயம்.
03. யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
04. யா/ மட்டுவில் மகாவித்தியாலயம்
05. யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வடமராட்சி வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/ உடுத்துறை மகாவித்தியாலயம்.
02. யா/ மருதங்கேணி இ.த.க.பாடசாலை.
03. யா/ குடத்தனை அ.த.க.பாடசாலை.
04. யா/ ஹாட்லிக் கல்லூரி
05. யா/ மெதடிஸ்த பெண்கள் பாடசாலை.
06. யா/ வட இந்து மகளிர் கல்லூரி.
07. யா/ வேலாயுதம் மகாவித்தியாலயம்.
08. யா/ தும்பளை சிவப்பிரகாச மகாவித்தி.
09. யா/ புற்றளை மகாவித்தியாலயம்.
10. யா/ வல்வை சிவகுரு வித்தியாலயம்.
11. யா/ கொற்றாவத்தை அ.மி.த.க.பாட்சாலை.
12. யா/ ஞானாசாரியார் கல்லூரி.
13. யா/ விக்னேஸ்வராக் கல்லூரி.
14. யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
15. யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
16. யா/ உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.
17. யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வலிகாமம் வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :
01. யா/ இராமனாதன் கல்லூரி.
02. யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
03. யா/ உடுவில் மகளிர் கல்லூரி.
04. யா/ அருணோதயாக் கல்லூரி.
05. யா/ யூனியன் கல்லூரி.
06. யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்.
07. யா/ விக்ரோறியாக் கல்லூரி.
08. யா/ வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
09. யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி.
10. யா/ மானிப்பாய் மெமோறியல்.
11. யா/ இளவாலை சென் கென்றியரசர் கல்லூரி.
12. யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.
13. யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தீவக வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/ சரஸ்வதி வித்தியாலயம்.
02. யா/ சேர் வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலயம்.
03. யா/ புங்குடுதீவு மகாவித்தியாலயம்.
04. யா/ ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ்.
05. யா/ நெடுந்தீவு மகாவித்தியாலயம்.
06. யா/ காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- யாழ். வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :
01. யா/ அச்சுவேலி மத்திய மகாவித்தியாலயம்.
02. யா/ நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்.
03. யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி.
04. யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
05. யா/ சோமாஸ்கந்தாக் கல்லூரி.
06. யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்.
07. யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.
08. யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்.
09. யா/ வேம்படி மகளிர் கல்லூரி.
10. யா/ மத்திய கல்லூரி.
11. யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்.
12. யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி.
13. யா/ சென் பற்றிக்ஸ் கல்லூரி.
14. யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
15. யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
16. யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி.
17. யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்.
18. யா/ கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.
19. யா/ இந்து மகளிர் கல்லூரி.
20. யா/ இந்துக் கல்லூரி.
21. யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

**பாடசாலை பரீட்சார்த்திகளும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றலாம்**

### யாழ்.மாவட்டத்துக்கான இணை அனுசரணை

45 வருடகாலசேவையில் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ் 212, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.

BOC தேசத்தின் வங்கியாளர் இலங்கை வங்கியின் 18 plus இளம்பருவத்தினருக்கு அன்புடன்....

கொமர்ஷல் வங்கி உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

SICS கணினி சேவைகள் இல.125A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எங்களின் நோக்கம், உங்களின் தொழில் நுட்பமுன்னேற்றம்.

Global Info IDM (PVT) LTD. JAFFNA CENTER IDM

IIS 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 2831

S.T.P 73, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

ஶ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம 302, கே.கே.எஸ் வீத', யாழ்ப்பாணம்.

UNIT 347, K.K.S. Road, Jaffna

Softview Computer College 43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna

### கிளிநொச்சி மாவட்டத்திற்கான கருத்தரங்கு நடைபெறும் நிலையங்கள்

காலம் :- 12.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
13.11.2004 (ஆங்கிலம்)

| | | |
|---|---|---|
| 01. | பூநகரி | - பூநகரி மகாவித்தியாலயம் |
| 02. | முழங்காவில் | - முழங்காவில் மகாவித்தியாலயம் |
| 03. | ஜெயபுரம | - ஜெயபுரம் அ.த.க. பர்டசாலை |
| 04. | பளை | - பளை மத்திய கல்லூரி |
| 05. | தருமபுரம் | - தருமபுரம் மகா வித்தியாலயம் |
| 06. | முரசுமோட்டை | - முருகானந்தா மகா வித்தியாலயம் |
| 07. | வட்டக்கச்சி | - வட்டக்கச்சி மகாவித்தியாலயம் |
| 08. | இராமநாதபுரம் | - இராமநாதபுரம் மகா வித்தியாலயம் |
| 09. | அக்கராயன | - அக்கராயன் மகா வித்தியாலயம் |
| 10. | இரணைமடு | - கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலை |
| 12. | கனகபுரம் | - கனகபுரம் மகா வித்தியாலயம் |
| 12. | உருத்திரபுரம் | - கிளிநொச்சி இந்துக் கல்லூரி |
| 13. | கிளிநொச்சி நகர் | - கிளிநொச்சி மகா வித்தியாலயம் |
| 14. | கிளிநொச்சி நகர் | - கிளிநொச்சி மத்திய கல்லூரி |
| 15. | விசுவமடு | -பிரமந்தனாறு மகா வித்தியாலயம் |

# அரிசி இறக்குமதி செய்வது தற்காலிகமாக இடைநிறுத்தம்

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்வதை, வர்த்தக நுகர்வோர் அமைச்சு தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

கொழும்புச் சந்தையில் பொருட்களுக்கான விலை 35 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்தே, அரிசி இறக்குமதியைத் தற்காலிகமாக இடைநிறுத்தியதற்கு காரணம் என வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

ஆனால், வர்த்தக நுகர்வோர் அமைச்சு ஏற்கனவே பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து 4 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வித்தது.

ஏற்கனவே வர்த்தக நுகர்வோர் அமைச்சு - நுகர்வோர் மலிவான விலையில் அரிசியைக் கொள்வனவு செய்வதற்காக, விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள ச.தொ.ச.வில் மலிவு விலையில் விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

இதற்கமைய ஒரு கிலோ சம்பா அரிசியை 35 ரூபாவுக்கும், வெள்ளைச் சம்பா அரிசியை 27.50 சதத்துக்கும், முத்துச் சம்பா அரிசியை 42 ரூபாவுக்கும் நுகர்வோர் பெறக்கூடியதாக இருந்தது.

அரிசி இறக்குமதி செய்வதை, நுகர்வோர் அமைச்சு தற்காலிகமாக இடைநிறுத்தியதைத் தொடர்ந்து, ஒரு கிலோ சம்பா அரிசி 50 ரூபாவாகவும்,வெள்ளைச் சம்பா அரிசி 47 ரூபாவாகவும், முத்துச் சம்பா 87 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஆனால், வீழ்ச்சியடைந்துள்ள உள்ளூர் அரிசியின் விலைகளை உயர்த்துவதற்காகவே வெளிநாட்டரிசிகளை இறக்குமதி செய்வது, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

## இரு சிறுவர்கள் ஒப்படைப்பு

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையவந்த இரு சிறுவர்கள்- அம்பாறை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் ஊடாக அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் - இவர்களை நேற்றுமுன்தினம் காலை ஒப்படைத்ததாக அக்கரைப்பற்று போர்நிறுத்தக் கண்காணிப்பு அலுவலகம் தெரிவித்தது. இரு சிறுவர்களும் திருக்கோவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட விநாயகபுரத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் விஜ்ஜிற்கு இலங்கையின் முப்படைகளினதும், கடற்படையினதும் தளபதியான தயாசந்தகிரி கொழும்புத்துறைமுகத்துக்கு கப்பல் ஒன்று வருவதைச் சுட்டிக்காட்டுகின்றார்

## இரண்டாவதாக கடத்தப்பட்டவர் இலங்கையர் இல்லையாம்!

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள அல் - மக்துர் பகுதியில் நேற்றுமுன்தினம் ஒரு அமெரிக்கர், இரண்டு அரபுக்கள் மற்றும் ஒரு இலங்கையர் என நான்குபேர் கடத்தப்பட்டதாக செய்திகள் வெளிவந்துள்ளது.

பாக்தாத்திலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி பொப் கலகாவை மேற் கோள்காட்டி சி.என்.என். இந்தச் செய்தியை வெளியிட்டிருந்தார்.

எனினும், கடத்தப்பட்ட நான்காவது நபர் - இலங்கையர் அல்ல என்று நேற்றுமுன்தினம் வெளியான செய்திகள் தெரிவித்தன. இந்த நபர் நேபாளியராக இருக்கலாம் என்றும். இது தொடர்பான பூரண விபரங்கள் கிடைக்கவில்லை எனவும் செய்திகள் தெரிவித்தன.

## ஜனாதிபதி பதவி பூர்த்தி விழா 12 ஆம் திகதி கம்பஹாவில்

(கொழும்பு)

சந்திரிகா பண்டாரநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்று, 10 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு, பதவிப்பூர்த்தி விழாவை எதிர்வரும் 12 ஆம் திகதி கம்பஹாவில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, 10 வருடங்கள் தொடர்ச்சியாக அரச நிர்வாகம் நடத்திய சிரேஷ்ட அரசியல் தலைவியாக சந்திரிகா விளங்கியமையைப் பாராட்டுமுகமாகவே- இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அபிவிருத்தித் திட்டத்தோடு சமாந்தரமாக நடைபெறவுள்ள இந்த விழாவை - கம்பஹா சிறிபோதி விளையாட்டு மைதானத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார, சமூக, கலாசார, மத மற்றும் அரசியல் ரீதியாக ஜனாதிபதி சந்திரிகா செய்துவரும் சேவைகளை கௌரவிப்பதன் பொருட்டு, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வை - அன்றைய தினம் நாடு முழுவதும் நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(தே)

## சச்சு மாஸ்ரர் கொலை

# மூன்று மாத காலத்தின் பின்னர் சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில்

(கொழும்பு)

கருணா குழுவைச்சேர்ந்த சச்சு மாஸ்டர் எனப்படும் கணபதிப்பிள்ளை, மகேந்திரன் உட்பட இருவர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சந்தேக நபரான மகேந்திரன் புவிதரன் 3 மாத கால இடைவெளியின் பின் நேற்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

கடந்த ஜூலை 15 ஆம் திகதி விளக்கமறியல் கைதிகளான சச்சு மாஸ்டர், தீபன் ஆகியோர் தண்டணைக் கைதியான மகேந்திரன் புவிதரன் என்பவரால் சுட்டுக்கெல்லப்பட்டனர்.

இந்தக் கொலை தொடர்பாக மகேந்திரன் புவிதரன் என்பவரும், இதற்கு உதவியாக தம்பிராசா அருளம்பலம் என்பவரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, முறையே மொனராகலை மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலைகளில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மொனராகலைச் சிறைச்சாலையில் பாதுகாப்பின் நிமித்தம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முதலாவது சந்தேக நபர் - முதல் தவணைக்கு மட்டும் அழைத்துவரப்பட்டபோதிலும், பாதுகாப்பு இல்லாத காரணங்களால் தொடர்ந்து ஆறு தவணைகள் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படவில்லை.

மொனராகலை சிறைச்சாலையிலிருந்து பலத்த பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டு, நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபரை - எதிர்வரும் 16 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் உத்தரவிட்டார்.

இரண்டாவது சந்தேக நபருக்கும் இதே உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. முதலாவது சந்தேகநபர் மீண்டும் பாதுகாப்புடன் மொனராகலை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

## காத்தான்குடியிலிருந்து ஆயிரம் பேர் இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

காத்தான்குடியைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் அந்த நகரை விட்டு அச்சம் காரணமாக வெளியேறி அருகிலுள்ள ஆரையம்பதியில் தஞ்சமடைந்துள்ளனர்.

சுமார் 200 குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் வெளியேறி ஆரையம்பதிக்கு சென்றபோது இவர்களை அங்குள்ள தமிழ் மக்கள் ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் தங்க வைத்துள்ளனர்.

இவர்களுக்கு சமைத்த உணவு மற்றும் நீராகாரங்கள் ஆரையம்பதி கிராமத்தைச் சேர்ந்த தமிழ் மக்களால் நேற்றுமுன்தினம் இரவு வழங்கப்பட்டது.

இவர்கள் ரவூப் மௌலவியின் மார்க்க நெறியை பின்பற்றுபவர்கள் என செய்திகள் தெரிவிக்கின்றன.

## கொழும்பில் ஊடகவியலாளர் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

கடந்த மாதம் 26 ஆம் திகதி கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது, லேகஹவுஸ் பத்திரிகையின் ஊழியரான சஞ்சய அசெல மதுரத்த என பவர் தாக்கப்பட்டதைக் கண்டித்து, நேற்றுமுன்தினம் சுதந்திர ஊடக இயக்கம், தினமின பத்திரிகையின் ஆசிரியர்பீட ஊழியர்கள் மற்றும் இலங்கை பத்திரிகையாளர் பாதுகாப்பு தொழிற்சங்கம் என்பன இணைந்து, எதிர்ப்பு ஆர்பாட்டமொன்றை நடத்தினர்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதன்போது ஊடக சுதந்திரம் தேவையென்ற சுலோக அட்டைகளை தாங்கிய ஊடகவியலாளர்கள - பத்திரிகையாளர்களுக்கு சுதந்திரம் வேண்டுமெனவும் கோஷமெழுப்பினர்.

அத்துடன் இந்த தாக்குதலுக்கு பின்னர், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் மௌனம் சாதித்துவருவதையிட்டும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடடோர் கண்டனம் தெரிவித்தனர்.

தம்மீதான தாக்குதலை ஐக்கிய தேசியக் கட்சியின் உடுநுவர பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரே மேற்கொண்டதாக, சஞ்சய பொலிஸாரிடம் முறையிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### மின்கட்டண அதிகரிப்புக்கு நீதிமன்றம் தடையுத்தரவு

நவம்பர் மாதம் முதல் மேற்கொள்ளப்படவிருந்த மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக நீதிமன்றத்தில் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் 90 அலகுகளுக்கு மேல் பாவிக்கப்படும் மின் அலகுகளுக்கு 4 சதவீதம் தொடக்கம் 7 சதவீதம் வரையான மின் கட்டண அதிகரிப்பை இலங்கை மின்சாரசபை ஒரு மாதத்துக்கு முன் வெளியிட்டிருந்தது.

பாவனையாளர்கள் சிலர் இலங்கை மின்சாரசபைக்கு எதிராக மின்கட்டண அதிகரிப்புத் தொடர்பாக பதிவுசெய்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் - இந்தக் கட்டண அதிகரிப்புக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது.

## கனேடியத் தூதரகம் மீளவும் திறக்கப்பட்டது

(கொழும்பு)

கடந்த ஒரு வாரகாலமாக மூடப்பட்டிருந்த, கொழும்பிலுள்ள கனேடியத் தூதரகம் - மீண்டும் நேற்றுமுனதினம் மீளத் திறக்கப்பட்டது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி இந்தத் தூதரகத்துக்குச் சென்ற பௌத்த பிக்குவின் கடவுச் சீட்டுக்குள் வெள்ளைப் பவுடர் இருந்ததை அவதானித்த கனேடியத் தூதரக அதிகாரிகள் - இந்தப் பவுடர் அந்திராக்ஸ் துகள்களாக இருக்கலாமெனத் தெரிவித்து, இதனைப் பரிசோதனை செய்யும்வரை தூதரகத்தை மூடிவைத்தனர்.

இந்த நிலையில் சோதனைக்கு அனுப்பப்பட்ட பவுடரில் எந்தவித தீங்கும் இல்லையெனவும், மீளவும் தூதரகத்தை திறக்கலாமெனவும் ஆய்வுகூடத் தகவல்கள் தெரிவித்த நிலையில், மீளவும் நேற்றுமுன்தினம் இந்த அலுவலகம் திறக்கப்பட்டது.

இதனிடையே பௌத்த பிக்குகள் மீதான சோதனை நடவடிக்கைகள் எதிர்வரும் காலங்களில் நடைபெறாமல் இருப்பதற்கான உறுதிப்பாட்டைக் கனடா அரசாங்கம் வழங்க வேண்டுமென கொழும்பிலுள்ள அரசியற் கட்சிகள் கனடா அரசைக் கேட்டுள்ளன.

## ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி இடையே எவ்வித கருத்து முரண்பாடும் இல்லை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையே எந்தவித கருத்து முரண்பாடுகளோ, பேதங்களோ கிடையாது. ஜனநாயக ரீதியான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெறுவது நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடியதே என நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை கண்டி வாவியைப் புனரமைக்கும் பணிகள் வைபவரீதியாக ஆரம்பிக்கப்பட்டன. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

சில ஊடகங்களில் பிரசாரம் செய்யப்படுவதைப்போன்று சுதந்திரக்கட்சிகளும், ஜே.வி.பிக்கும் இடையே எந்த வித பிணக்கும் கிடையாது. கண்டி மாநகர அபிவிருத்திப் பணிக்ளுக்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இறுதி டெஸ்ட் போட்டியிலும் இந்தியா மந்த நிலையில்!



(மும்பை)

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்காவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்று மும்பையில் ஆரம்பமானது.

மழை காரணமாக தாமதமாகவே ஆட்டம் தொடங்கியபோதும், இந்திய அணி மோசமான நிலையில் இருந்து வருகிறது.

நேற்றுக்காலை மழை காரணமாக ஆடுகளம் ஈரலிப்பாக இருந்ததால் ஆட்டத்தை மதியத்துக்குப் பின்னரே தொடங்கமுடியும் என்று



நடுவர்கள் அறிவித்தனர்.

இதன்பின்னர் ஆட்டம் தொடங்கிய போது நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

கௌதம் கம்பீரும், வீரேந்தர் ஷேவாக்கும் இணைந்து ஆட்டத்தை ஆரம்பித்தனர். ஆரம்பம் விறுவிறுப்பானதாக இருந்தபோதும் - இந்திய அணியின் ஸ்கோர் 11 ஆக இருந்த போது அதிர்ச்சி காத்திருந்தது.

11 பந்துகளை எதிர்கொண்டு 8 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மக்ராவின் பந்துவீச்சில் போல்டானார் ஷேவாக்.

இதையடுத்து ராவிட் களமிறங்கியபோதும் இந்திய அணிக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. எதிர் முனையில் ஆடிக்கொண்டிருந்த



ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கௌதம் கம்பீர் ஜிலெஸ்பியின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இவர் 8 பந்துகளில் 3 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். இதையடுத்து சச்சின் டெண்டுல்கர் களம் இறங்கினார். நெருக்கடிக்கு மத்தியில் டெண்டுல்கரும், ராவிட்டும் ஆட்டத்தைத் தொடங்க மீண்டும் மழை குறுக்கிட ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

4 ஓவர்கள் மட்டுமே விளையாடிய நிலையில் இடைநிறுத்தப்பட்ட ஆட்டம் பின்னர் மாலை மீண்டும் தொடங்கப்பட்டது. மழை இல்லா



வட்டாலும், போதிய வெளிச்சமின்மையால் மின்னொளியில் ஆட்டம் நடைபெற்றது.

மின்னொளியில் 7 ஓவர்கள் மட்டுமே ஆட்டம் நடைபெற்றது. ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 2 விக்கெட் இழப்புக்கு 22 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ராவிட் 16 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 9 ஓட்டங்களையும், டெண்டுல்கர் 31 பந்துகளை எதிர்கொண்டு 2 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.




பந்துவீச்சில் மக்ரா 6 ஓவர்களில் 9 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டையும், ஜிலெஸ்பி 5 ஓவர்களில் 13 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# இந்தியாவுடன் மோதும் பாகிஸ்தான் அணி அறிவிப்பு

இந்திய கிரிக்கெட் சபையின் 75 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் கொல்கத்தாவில் வருகிற 13 ஆம் திகதி இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதும் ஒருநாள் ஆட்டம் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டது. காயம் காரணமாக இலங்கை டெஸ்ட் போட்டியில் இடம் பிடிக்காத வேகப்பந்து வீச்சாளர்கள் அக்தர் மற்றும் சமி ஆகியோர் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த பல போட்டிகளில் மோசமாக ஆடிய யசீர் ஹமீட் அணியில் இருந்து நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக அமீர் பஷீர் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தியாவுடன் நடக்கும் இந்தப் போட்டியில் பாகிஸ்தான் முழுப் பலத்துடன் களமிறங்கக் காத்திருக்கிறது. இதனால்தான் அக்தர் மற்றும் சமி அணியில் வாய்ப்பு பெற்றுள்ளனர் என்று, தேர்வுக்குழுத் தலைவர் வாசிம் பாரி தெரிவித்தார்.

அணிவீரர்கள் விபரம் வருமாறு-

இன்ஸமாம் உல்ஹக் (கப்டன்), தபீக் உமர், இம்ரான் பர்கத், யூசுப் யுகானா, யூனுஸ்கான், அப்துல் ரசாக், சாகிட் அப்ரிடி, கம்றன் அக்மல், ராணா நவீத், சொகைப் மலிக், முகமது சமி, ரியாஸ் அப்ரிடி, அமீர் பஷீர்.

# சாட்சிக் கூண்டில் டரன் லீமன்!



அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர் டரன் லீமன் கால் காயம் காரணமாக நாக்பூர் டெஸ்ட், இரண்டாவது இனிங்ஸில் ஆடவில்லை. கடந்த வெள்ளியன்று அவர் அவுஸ்ரேலியா கிளம்பிவிட்டார்.

அணிக்கு ரிக்கி பொண்டிங் வந்துவிட்டதால் அவர் ஊர் திரும்பிவிட்டார் என்று தகவல்கள் வந்தன. ஆனால், அவர் நாடு திரும்பியதற்கு வேறு காரணம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் டேவிட் ஹுக்ஸ் இரவு விடுதி ஒன்றில் கொலை செய்யப்பட்டார். அந்தச் சம்பவத்தின்போது லீமன் அங்கு இருந்தார்.

இந்தக் கொலை வழக்கில் முதல் சாட்சி லீமன். வழக்கு விசாரணை 15 ஆம் திகதி மெல்போர்ன் நீதிமன்றில் நடைபெறுகிறது. ஹுக்ஸ் கொலை வழக்கில் லீமன் முதல் சாட்சி என்பதால் அவர் கட்டாயம் அங்கு இருக்கவேண்டும். ஆகவே அவர் சீக்கிரமே நாடு திரும்பிவிட்டார் என அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.




# சங்ககாரவுக்கு அபராதம்



(கராச்சி)

பாகிஸ்தானில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டின் போது முறைதவறி நடந்தார் எனத் தெரிவித்து இலங்கை அணி வீரர் குமார் சங்ககாரவுக்கு முப்பது வீத தண்டப்பணம் அறிவிடப்பட்டுள்ளது.

இரண்டாவது டெஸ்ட்டின் போது சங்ககார ஆட்டமிழந்து செல்கையில், தனது துடுப்பு மட்டையைச் சுழற்றி எறிந்த வேளையிலேயே இவர் கிரிக்கெட் விதிகளை மீறியதாகத் தெரிவித்து இவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

# சாதிக்காத யாருக்கும் அணியில் இடமில்லை!

## கங்கூலி தெரிவிப்பு

(புதுடெல்கி)

சாதிக்காத யாருக்கும் அணியில் இடமில்லை என்று இந்திய அணி கப்டன் கங்கூலி கூறியுள்ளார்.

தொடையில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்திய கப்டன் சௌரவ் கங்கூலி மும்பை டெஸ்ட் போட்டியிலிருந்து நீக்கப்பட்டார்.

முன்னதாக நாக்பூரில் நடந்த 3 ஆவது டெஸ்ட்டிலும் அவர் ஆடவில்லை. இந்த நிலையில் பத்திரிகை ஒன்றுக்கு கங்கூலி அளித்த பேட்டியில் -



தொடர்ந்து மோசமாக ஆடினால் எந்த வீரருக்கும் இந்திய அணியில் நிரந்தர இடம் கிடையாது. இதில் நான் மட்டும் விதிவிலக்கு கிடையாது.

கடைசி டெஸ்ட் போட்டியில் ஆடவில்லை என்பதால், கங்கூலி நேற்று முன்தினம் கொல்கத்தா திரும்பினார். அங்கு அவர் மருத்துவ நிபுணர் கல்யாண் முகர்ஜியை சந்தித்து ஆலோசனை பெற்றார். இதன் பின்னர் டாக்டர் கல்யாண் கூறுகையில் -

கங்கூலிக்குத் தொடையில் லேசான காயம் ஏற்பட்டுள்ளது. இதற்கு குறைந்தபட்சம் ஒரு வாரம் ஓய்வு எடுத்தாக வேண்டும்.

இந்த ஓய்வு காலத்தில் நீச்சல் போன்ற பயிற்சிகளை அவர் செய்யலாம். மற்றபடி அமைதியான மன நிலையுடன் இருந்தாலே போதும் என்றார்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான போட்டிகள் முடிந்த பின்னர் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 2 டெஸ்ட் போட்டியில் இந்தியா ஆடவுள்ளது. இந்தப் பயணத்தின்போது கங்கூலி அணிக்கு திரும்பிவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# 'மிஸ்டர் ஒலிம்பியா' வாக மீண்டும் ரோனி கால்மேன்



(மும்பை)

'மிஸ்டர் ஒலிம்பியா' பட்டத்தை ஏழாவது முறையாகக் கைப்பற்றியுள்ளார் அமெரிக்காவின் ரோனி கால்மேன்.

அமெரிக்காவின் லொஸ் வேகாஸ் நகரில் 2004 ஆம் ஆண்டுக்கான ஆணழகன் போட்டி கடந்த மாதம் 30 ஆம் திகதி நடைபெற்றது.

உலகின் முன்னணி வீரர்கள் பலரும் இந்தப் போட்டியில் பங்கேற்றனர்.

இதில் அமெரிக்க வீரர் ரோனி கால்மேன் சம்பியன் பட்டம் வென்றார். ஏழாவது முறையாக கால்மேன் 'மிஸ்டர் ஒலிம்பியா' பட்டம் கைப்பற்றுவது குறிப்பிடத்தக்கது.

ஹொலிவூட் நடிகரும், அமெரிக்காவின் கலிபோர்னிய மாகாண ஆளுனருமான ஆனல்ட் சுவாசிநேகர் ஏழு முறை 'மிஸ்டர் ஒலிம்பியா' பட்டம் வென்று சாதனை படைத்திருந்தார்.

இந்த வெற்றியின் மூலம் அவரின் சாதனையைச் சமன்செய்துள்ளார் ரோனி கால்மேன்.





நாகர்கோவில் களமுனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லெப். கேணல் ராகவன் நினைவுதின தாச்சி சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்ற அணிக்கு கேணல் ஜெயம் வெற்றிக்கேடயம் வழங்குவதை முதல்படத்திலும், முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகள் நிற்பதனை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# கலை கலாசாரத்தைப் பேணுவதிலேயே எமது இனத்தின் விடிவும் தங்கியுள்ளது!

## கலாசார விழாவில் செம்மணன்



(யாழ்ப்பாணம)

எமது இனத்தின் பலத்தை உடைப்பதற்காக நமது கலை, கலாசாரத்தை முதலில் அழிக்க வேண்டும் என்று எதிரி காணும் கனவுக்குத் தக்க பதிலடியாகத் திகழ்கிறது இன்றைய கலாசார விழா நிகழ்வுகள் என, கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் கலாசார நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் -

எமது போராட்டம் எமது இனத்தின், கலை, கலாசாரப் பண்பாடுகளோடு பின்னிப் பிணைந்தது. எமது மண்ணின் பாரம்பரியம் கட்டிக் காக்கப்படவேண்டும் என்பதில் நாம் விழிப்பாகவே உள்ளோம். எமது முயற்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் நடந்து கொண்டிருக்கும் இன்றைய கலாசார நிகழ்வு பாராட்டுக்குரியது.

நிகழ்வில் இளங்கலைஞர்கள் உள்வாங்கப்படும் அதேவேளை, கலைக்காகவே வாழ்ந்து மடிந்து எமது கலாசாரம் பேணப்படக் காரணமாயிருந்த முதிர்ந்த கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிப்பது மிகப் பொருத்தமான செயற்பாடாகும்.

நாதஸ்வர ஓசை எமது கலையில் புகுந்து மனதுக்கு ரம்மியம் அளிப்பது போல் எமது கலை கலாசாரப் பண்பாடுகள் இனிமையும், செழுமையும், வலிமையும் எமக்களித்து நிற்கின்றன. எமது விடிவுக்காக 30 வருடங்கள் செய்த போராட்டம் எதுவித தீர்வும் எட்டப்படாத நிலையில் 3 வருடங்கள் ஓய்வெடுத்திருக்கின்ற இந்த இடைக்காலத்தில் எமது மக்கள் தமது பாரம்பரியத்தைப் பேண எடுக்கப்படும் முயற்சிகள், ஊரெல்லாம் கடந்து உலகளாவிய ரீதியில் குடியேறியுள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் மட்டிலும் சுடர்விடத் தொடங்கிவிட்டன.

தமது குழந்தைகளுக்குத் தாம் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழியறிவூட்டலுக்காக எழுப்பப்படும் கல்விக்கூடங்கள், கலை, கலாசார பண்பாட்டுக் கழகங்கள் போன்றவை எமது இலட்சியப் போராட்டத்துக்கு வலுச் சேர்ப்பதை உணரக்கூடியதாகவுள்ளது. அத்துடன், எதிரி காணும் கனவுக்குத் தக்க பதிலடியாகவும் அவை வடிவம் கொடுத்து நிற்கின்றன.

எமது போராட்டத்தின் பின்னால் மறைந்து கொண்டிருக்கின்ற கலை, கலாசார, பண்பாடு என்பனவற்றைப் பாதுகாப்பதிலேயே எமது விடிவு தங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

(13)

# கட்டாக்காலிகளைப் பிடிக்க மாநகரசபை நடவடிக்கை!

## ஆணையாளர் தெரிவிப்பு

யாழ். மாநகரப் பகுதிகளில் நடமாடும் கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டு, மீளளிக்கும்போது தண்டப்பணம் அறவிடப்படும் என்று ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

இது குறித்து மாநகரசபை வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல இடங்களிலும், கட்டாக்காலி ஆடு, மாடுகள் - போக்குவரத்துக்கு இடையூறாகவும், விபத்துப் போன்ற வேறு சேதங்களை விளைவிப்பனவாகவும், அலைந்து திரிவதாகப் பலர் மாநகரசபைக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

வீடுகளில் கட்டிவளர்க்காது, இவ்வாறு வீதிகளில் மேய்ச்சலுக்காகத் துரத்திவிடப்படும் கால்நடைகளைப் பிடிப்பதற்கும், அவற்றை மீளளிக்கும்போது அதற்கான தண்டப்பணத்தை வசூலிப்பதற்கும், யாழ்ப்பாண மாநகரசபை முடிவுசெய்துள்ளது.

நாளை தொடக்கம் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள விருப்பதாக மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.



தேசிய மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு வலி. வடக்கு பிரதேச சபையின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரதி நகுலேஸ்வரன், பிரதேசசபை வளவில் மரம் நடுவதைப் படத்தில் காணலாம். அருகில் பிரதேச செயலர் சு.முரளிதரன். (101)

## கடற்படை முகாம் பிரதேசத்தில் படம் பிடிப்பதற்குத் தடை!

(குறிகட்டுவான்)

குறிகட்டுவானில் கடற்படை முகாம் வளாகப் பகுதியில் புகைப் படம் பிடித்தல், வீடியோப் படம் பிடித்தல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளதாகக் கடற்படையினரால் அறிவித்தற் பலகையொன்ற மும்மொழிகளிலும் எழுதப்பட்டுக் கடந்த வாரம் நாட்டப்பட்டுள்ளது.

நயினாதீவு, நெடுந்தீவு போன்ற பகுதிகளுக்குச் சுற்றுலா நோக்கமாக வரும் பெருந்திரளானோர் இந்தப் பகுதியில் நின்று தங்கள் ஞாபகத்துக்காகவும், துறைமுகத்தின் அழகுக்காகவும் படம்பிடிப்பது வழக்கமான ஒன்றாக இதுவரை காலமும் இருந்து வந்தது.

இதேவேளை குறிகாட்டுவானிலுள்ள கடற்படைக் காவலரண்கள் தற்போது பலப்படுத்தப்பட்டு முகாம் போன்ற நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே பயணிகள் தங்குமிடம் ஒன்றைத் தங்கள்வசம் வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(113)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : அ.சரூண்
விலாசம் : யாழ்ப்பாணம்

### எட்டாவது அகவையில்



பெயர் : ஜீ.அபிராமி
விலாசம் : மானிப்பாய்

### எட்டாவது அகவையில்



பெயர் : பா.தாரணி
விலாசம் : கோண்டாவில்

### பத்தாவது அகவையில்



பெயர் : செ.கஜந்தன்
விலாசம் : கூவில்

# சின்னஞ்சிறு செய்திகள்

### கஞ்சா வைத்திருந்த பெண்ணுக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம்

சுண்டுக்குளிப் பகுதியில் கஞ்சா வைத்திருந்த பெண் ஒருவருக்கு- 15 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டது.

சுண்டுக்குளியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் கஞ்சா வைத்திருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டு மது வரித் திணைக்கள அதிகாரிகள் கைது செய்து யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 15 ஆயிரம் ரூபா செலுத்துமாறு உத்தரவிட்டதுடன், கோப்பாய் சிவபூமி பாடசாலைக்கு 5 ஆயிரம் ரூபா தர்மப் பணம் செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

### கிராம அபிவிருத்தி சங்கத்தின் பொதுக்கூட்டம்

தென்மராட்சி கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் பொதுக்கூட்டமும், நெறியாளர் சபைக் கூட்டமும் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை காலை 10.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலகம் இரண்டாகப் பிரிந்தமையால், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசமும், இரண்டாகப் பிரிதல் தொடர்பானதும், வேறு சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சமாச செயலாளர் தெரிவித்தார். (25)

### தங்கப் பதக்கம் அணிவிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க சுவிற்ஸர்லாந்து கிளையால்,

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து 2004 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களுக்குத் தங்கப் பதக்கம் அணிவிக்கும் நிகழ்வும், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்குப் பணப் பரிசு வழங்கும் நிகழ்வும் இன்று இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இன்று காலை 10.00 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

### வீதி விபத்துக்கள் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைத் தவிர்ப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று 2.30 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களுக்கான காரணங்கள் பற்றியும், இந்த வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளது.

### துயிலுமில்லத்தில் சிரமதானம்

(சாட்டி)

தீவக சிகை ஒப்பனையாளர் சங்கத்தினால் மாவீரர் நாளையொட்டி, சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் நாளை சிரமதானப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

அன்றைய தினம் தமது தொழில் நிலையங்களை மூடி, தீவகம் சார்ந்த அனைத்து உறுப்பினர்களும் தவறாது நேர காலத்தோடு வேலணை சங்கப் பணிமனையில் ஒன்று கூடுமாறு சங்கச் செயலாளர் ச.அன்ரன் இராசநாயகம் கேட்டுள்ளார்.

### அரச காணிகளில் வசிப்போருக்கு காணி உறுதிப் பத்திரம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்துக்குட்பட்ட மீசாலை வடக்குப் பகுதியில் அரச காணிகளில் வசித்து வரும் 9 குடும்பங்களுக்கு 'காணி உறுதிப் பத்திரம்' வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதுவரை காலமும் அரச காணிகளில் வசித்து வருகின்ற குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட 9 குடும்பங்களுக்கே இவ்வாறு காணி உறுதிப் பத்திரம் வழங்கப்படவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலக அதிகாரியால், கிராம அலுவலர் முன்னிலையில் உறுதிப் பத்திரம் வழங்கப்படும் என, உத்தியோகத்தர் காணி எஸ்.நவராசா தெரிவித்தார்.

(25)

### தையல் பயிற்சி வகுப்பு

(கல்வயல்)

கல்வயல் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூலம், இந்தப் பிரதேசத்திலுள்ள மிகவும் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களின் நன்மை கருதி தையல் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் இந்தப் பிரதேச வறிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர் என கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சோ.பவானி தெரிவித்தார்.

### பெரிய மாவடி சனசமூக நிலயத்தை மீள இயக்க நடவடிக்கை

(வடமராட்சி)

சாவகச்சேரி பெரிய மாவடி சனசமூக நிலையத்தை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சனசமூக நிலையத்தில் கடந்த 8 வருடங்களாக நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து அகன்று சென்றுள்ளதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

படையினர் நிலைகொண்டிருந்ததால், அந்தப் பகுதிகளின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக அமைந்திருந்ததுடன். அந்தச் சனசமூக நிலையத்தை மையமாகக் கொண்டே இந்தப் பிரதேச அபிவிருத்திகளும் பாதிப்படைந்து வருவதாகச் சுட்டிக்காட்டியதையடுத்தே, படையினர் அங்கிருந்து அகன்று சென்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து சனசமூக நிலையத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (17)



# சீரற்ற மழைப்பொழிவின் காரணமாய் முடங்கிப் போயுள்ள நெற்செய்கை

ஆண்டுதோறும் ஆவணி, புரட்டாதி மாதங்களின் வருகையைத் தொடர்ந்து, யாழ்.குடாநாட்டில் காலபோக நெற்செய் கைக்கான முன் ஆயத்தப்படுத்தல்களில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டிருப் பார்கள். இவ்வாறே இந்த முறையும் கால போக நெற்செய்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் வங்காள விரிகுடாவில் தோன் றிய அமுக்கம், மழை பொழிவை சீரற்ற தாக்கியதால் நெற்செய்கைக்கான விதை யிடலும், ஒழுங்குமுறையும் தவறிப் போயுள்ளது.

பல விவசாயிகள் தாம் வழமையாக மழைப்பொழிவை எதிர்பார்த்து, விதை யிடுவது போன்று புரட்டாதி மாதம் விதை யிட்டனர். ஆனால், இந்தக் காலப் பகுதியில் தோன்றிய வளிமண்டல அமுக் கத்தால் பெரும்பாலான விவசாயிகள் விதையிட்ட அன்றே பெருமழை பொழிந் தது.

இதன்காரணமாக, நெல்வயல்கள் பல விதைப்பு மேற்கொண்டபடியும், ஏனை யவை விதைப்பை மேற்கொள்ளாது, தரி சாகவும் மழைநீரினுள் அமிழ்ந்து போயுள் ளன. மேலும் தொடர்ந்து, தொடராக மழைப்பொழிவுகள் அடிக்கடி ஏற்பட்ட தால், விதைப்பு மேற்கொண்ட வயல் களில் நெல் முளைக்காது போக, ஏனைய வயல்களில் (தரிசாக விடப்பட்ட) புல் பூண்டுகள் நிறைந்து காணப்படுகின்றன.

இதைத் தொடர்ந்து வளிமண்டல அமுக்கம் சீராக வந்த பின்னர், வெயில் எறிக்கத் தொடங்கியதால், அதன் வெம் மையால் தாழ்நிலங்கள் தவிர்ந்த ஏனைய நிலங்களில் நீர்



வற்ற ஆரம்பித்ததைத் தொடர்ந்து, ஐப்பசி மாத முற்பகுதியில் மீண்டும் மீள் விதைப்பையும், விதைக்கப்படாத நிலங்களில் புதிய விதைப்பையும் மேற்கொண்டனர்.

ஆனால், மீண்டும் ஐப்பசி மாத நடுப்பகுதி யில் தொடர்ந்து மழைபொழியத் தொடங் கியதால், மீண்டும் நெற்செய்கை முடக்கம் கண்டுள்ளது. பருவகால விதைப்பை மேற் கொள்ள முடியாதவாறு வயல்நிலங்கள்



நீரினுள் அமிழ்ந்து போயுள்ளதால், விவ சாயிகள் பெரும், மன உளைச்சலுக்கு ஆட் பட்டுள்ளனர்.

தைபிறந்தால் வழிபிறக்கும் என்றொரு பழமொழி உண்டு. இது உழவன் வாழ்வில் நிதர்சனமான உண்மையாகும். அதாவது

**களனியிலே களைபிடுங்கி, விதையிட்டு,**
**நாற்று நடுவு செய்து,**

**முற்றிய நெற்கதிர்களின்**
**அழகே தனியழகு.**

இதைப் பார்த்து ரசித்து, அதை உழவன் அறுவடை செய்து, தையிலே வீடுகொண்டு சென்று, தைப்பொங்கல் பொங்குகின்றபோது, அவனது மகிழ்ச்சியை அளவிட முடியாது.

அப்பொழுது அவன் மனை அறுவடைச் செல்வத்தால் நிறைந்து வழியும். இத னாலேயே உழுதுண்டு வாழ்வோர் 'தை பிறந்தால் வழிபிறக்கும்' என ஆடிப்பாடி மகிழ் கின்றனர்.

ஆனால், இந்தமுறை அத்தகைய கனவு கள் எல்லாம் பகல் கனவாக மாறிவிட்டதோ என உழவர் மத்தியில் அச்சம் எழுந்துள் ளது.

இதனால், பாதிப்படைந்துள்ள விவசாயக் குடும்பங்களை, இன்றைய பொருளாதாரக் கொள்கையின் விலைவாசி உயர்வும் மேலும் பாதிப்படைய வைத்துள்ளது.

தற்பொழுது கூலி ஆட்கள் பற்றாக்குறை, எரிபொருள் விலையுயர்வு என்பவற்றால் நிலம் பண்படுத்தல் செலவும் உயர்வாகவே உள்ளது. இந்த நிலப்பண்படுத்தல் முறை யில் மூன்று வகையான தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

**1. உழைப்புச் செறிவு தொழில்நுட்பம்.**
**2. நடுத்தரச் செறிவு தொழில்நுட்பம்.**
**3. மூலதனச் செறிவு தொழில்நுட்பம்.**

என்பனவாகும்.

இதில் உழைப்புச் செறிவு தொழில்நுட்ப முறை என்பது - பயன்படுத்தப்படும் தொழில் நுட்ப முறையில் மூலதனத்தை விடவும், உழைப்பின் பங்கு அதிகமாக இருந்தலா கும். *உதாரணமாக* - விவசாயத்துறையில் நிலப்பண்படுத்தலுக்கு மண்வெட்டியைப் பாவிப்பதைக் குறிப்பிடலாம்.

நெல் விதைப்பில் விவசாயிகள் இந்த முறையைப் பயன்படுத்துவது மிகவும் செலவு கூடியதாகும். ஒரு ஏக்கர் நிலத்தைப் பண்படுத்த சுமார் பத்து கூலியாட்கள் தேவைப்பட்டால், ரூபா 4500 செலவாகிறது. *(10x450 = 4500 ஒருவருக்கான நாட்கூலி ரூபா 450 ஆகும்)*

இதே போல் நடுத்தரச் செறிவான தொழில் நுட்பத்தைப் பார்த்தோமா னால், இங்கு உற்பத்தியில் கையா ளப்படும் உழைப்பின் பங்கும், மூல தனத்தின் பங்கும் ஏறக்குறைய சம மாக இருப்பதைக் காணலாம்.

நெல் விதைப்பில் இரண்டு சில்லு உழவு இயந்திரத்தை (லாண்ட்மாஸ்ரர்) பயன்படுத்துவதைக் குறிப்பிடலாம். ஆனால், இத்தகைய தொழில்நுட்பும் பரந்து காணப்படாததோடு, எல்லா இடங்களுக்கும் பொருத்தமாக அமை யாததால், விவசாயிகள் இந்த முறை யைப் பயன்படுத்துவது குறைவு.

இதனாலேயே மூன்றாவது முறை யான மூலதனச் செறிவான முறையை நாடுகின்றனர். இங்கு உழைப்பின் பங் கைவிட, மூலதனத்தின் பங்கு அதி கமாக இருக்கிறது. இதற்கு நாலு சில்லு உழவு இயந்திரம் பாவிக் கப்படுகிறது. இதனையே பெரு மளவான விவசாயிகள் பயன்படுத்து கின்றனர்.

இதற்குக் காரணம் விரைவான சேவை என்பதுடன், இலகுவான முறை என்பதாகும். இன்று எரி பொருள் விலை அதிகரிப்பதால், ஒரு ஏக்கர் நெல் விதைப்புக்கு ரூபா 1440 இல் இருந்து ரூபா 1680 வரை அறவிடப்படுகிறது. *(ஒரு பரப்புக்கு ரூபா 60 - ரூபா 70 வரை அறவிடப்படுகிறது. ஒரு ஏக்கர் = 24 பரப்பு).*

இத்தகைய செலவுகளுக்கு மத்தி யிலேயே உழவர்கள் தங்களுடைய நெல் விதைப்பை மேற்கொள்கின்றனர். அதாவது வயல்களை முன் ஆயத்தப்படுத்தல் பண் படுத்துகைக்காக உழவு செய்தல், வரம்பு களைச் சரிபார்த்தல், எரு விசிறுதல், பின்னர் நெல்விதைப்பு, களைபிடுங்குதல், கிருமி நாசி னிப் பிரயோகம், வளமாக்கிப் பிரயோகம் எனத் தொடங்கி, பல சிரமங்களின் மத்தியிலேயே விவசாயிகள் நெல் அறுவடை மேற்கொள்கின்ற னர். அத்துடன், சூடுமிதித்தல் பொதி செய்தல், சந்தைப்படுத்தல் என பெருமளவான நிதிச் செலவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

கூலியாட்களின் பற்றாக்குறை, இயற்கை யின் சீற்றம், ஒழுங்கற்ற மழைப்பொழிவுகள் எனப் பலவற்றைத் தாண்டவேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் தாண்டிய பின்னர், அவர் களது உற்பத்திப் பொருளுக்குரிய விலை கிடைக்கிறதா என்றால், அது கேள்விக்குரியதே?

ஒரு மூட்டை நெல்லுக்கான சந்தை விலை தற்பொழுது ரூபா 1200 - ரூபா 1600 ஆக அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் ஒரு மூட்டை நெல் என்பது சாக்குடன் 70 கிலோகிராம் ஆகும்.

இத்தகைய விலை - விவசாயிகளின் இன்றைய உற்பத்திச் செலவுடன் ஒப்பு நோக்குகையில் நட்ட விலையையே காட்டு கிறது. ஆனால் அவர்களின் பொருளாதார வறுமை, அவர்களை மீண்டும் மீண்டும் அந்தத் தொழிலிலேயே ஈடுபடவைக்கிறது.

அரசு - வரிச் சலுகைகளுடன் விவசாய உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பதால், உள்ளூர் உற்பத்திப் பொருட்களைவிட, இறக்குமதிப் பொருட் களுக்கான விலை ஒப்பீட்டளவில் குறை வாகவே இருப்பதால், உள்ளூர் உற்பத்தி யாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இதற்குக் காரணம் உள்ளூர் உற்பத்தி களின விரிவாக்கமின்மையும், தகுந்த தொழில் நுட்பப் பயன்பாடு மேற்கொள்ளாமையால் ஏற்பட்ட உற்பத்திக் குறைவுமாகும். உயர் பாதுகாப்பு வலயங்களால் உள்வாங்கப்பட்ட விவசாய நிலங்களும், வெடிஅபாயம் நிறைந்த காணிகளும் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களே காலபோக நெற்செய்கைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ஊழியப் பற்றாக்குறை, உற்பத்திச் செலவு அதிகரிப்பு, தொழிநுட்ப விரிவாக்கமின்மை, புலம்பெயர்வு, பயனுள்ள பெரும்பகுதி நிலங்கள் தரிசாக விடப்பட்டுள்ளதோடு, இவற்றில் ஒரு சிறிய நிலப்பரப்பே இன்று நெற்செய்கைக்கு உற் படுத்தப்படுகிறது.

இவையும் இன்று முன்கூட்டிய மழைப் பொழிவாலும், சீரற்ற காலநிலையாலும் முடக் கம் கண்டுள்ளன. இதனால் பல ஏழை விவ சாயக் குடும்பங்கள் விரக்தியடைந்துள்ளதோடு, எதிர்காலம் பற்றிய ஏக்கமும் இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இவற்றைக் களைய இவர் களுக்கு தகுந்த நிவாரணம் வழங்கப்பட வேண்டும். வழங்கப்படும் நிவாரண உதவி ஒரு உற்பத்தியாளனை சோம்பேறியாக்காமல், மேன்மேலும் உற்பத்தியில் ஈடுபட்டு, உற் பத்தி விரிவாக்கத்துக்குத் தூண்டுகோலாக அமைபவையாக இருத்தல் வேண்டும். *

எஸ்.ஜெயா

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 80/= | 80/= | 90/= | 90/= | 90/= | 60/= | 60/= |
| வெண்டிக்காய் | 30/= | 40/= | 50/= | 40/= | 50/= | 40/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 80/= | 90/= | 100/= | 120/= | 90/= | 90/= | 100 = |
| கத்தரிக்காய் | 60/= | 50/= | 60/= | 60/= | 50/= | 60/= | 80/= |
| பாகற்காய் | 80/= | 80/= | 90/= | 60/= | 90/= | 80/= | 70/= |
| கரட் | 40/= | 40/= | 50/= | 40/= | 40/= | 60/= | 40/= |
| பீற்றூட் | 20/= | 35/= | 40/= | 25/= | 25/= | 30/= | 30/= |
| முருங்கைக்காய் | 120/= | 100/= | 100/= | 120/= | 100/= | 160/= | - |
| வெங்காயம் | 50/= | 45/= | 50/= | 50/= | 50/= | 50/= | 60/= |
| பச்சை மிளகாய் | 50/= | 40/= | 50/= | 50/= | 45/= | 40/= | 40/= |

## தொழில்மலர்

# உற்பத்தித் திறனில் தங்கியுள்ள ஒரு நாட்டின் முன்னேற்றம்

உற்பத்தித்திறன் மிக அவசியமானதாகக் காணப்படுகிறது. ஏனெனில், ஒரு நாடு உற்பத்தித்திறனை அபிவிருத்தி செய்வதன் ஊடாகக் குறைந்த வளங்களைக்கொண்டு, கூடிய பயனைப் (வெளியீட்டை) பெற்றுக் கொள்ளமுடியும். இதன் ஊடாகவே அந்த நாடு, வள நெருக்கடி என்ற பெரும் சவாலை எதிர்கொள்ள முடியும். இன்று சகல நிறுவனங்களும் உற்பத்தித்திறன் கொண்ட செயன்முறைகளையே விரும்புகின்றன. ஏனெனில், கூடிய இலாபத்தை இதனூடாகவே பெற்றுக்கொள்ள முடியும் என்பதால் ஆகும். உற்பத்தித்திறனை பின்வருமாறு அளவிடலாம்.

**உற்பத்தித்திறன் = வெளியீடு / உள்ளீடு**

சில நாடுகள் உற்பத்தித்திறனைக் கையாண்டு, இரண்டாம். உலக யுத்தத்தில் இழந்த நமது பொருளாதாரத்தை மீள அமைத்துக்கொண்டன. இதற்கு உதாரணமாக - ஆசிய நாடுகளில் ஜப்பான், 1955 ஆம் ஆண்டு அமெரிக்காவிடம் இருந்து நிதியுதவி தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொண்டு செயற்படத் தொடங்கியது. இதன் பயனாக சில காலங்களில் ஜப்பான் புதிதாக உலக சந்தையில் தன்னை இலகுவாக இணைத்துக்கொண்டதுடன், பொருளின் தன்மை, தரம் முதலியவற்றிலும் முதன்மை பெறத்தொடங்கியது.

இந்த உற்பத்தித்திறன் வளர்ச்சியின் ஊடாக 1964 ஆம் ஆண்டு ஆசிய உற்பத்தித்திறன் நிறுவனம் என்ற ஓர் அமைபபு தோற்றம்பெற்றது. 1966 ஆம் ஆண்டு இலங்கையும், 1968 ஆம் ஆண்டு இந்தோனேசியாவும், 1969 ஆம் ஆண்டு சிங்கப்பூரும், 1983 ஆம் ஆண்டு மலேசியாவும் இந்த அமைப்பில் இணைந்துகொண்டன. இலங்கையானது ஆரம்பத்திலேயே இந்த அமைப்பில் இணைந்துகொண்டாலும், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, உற்பத்தித்திறனில் அதனுடைய பங்களிப்பு குறைவாகவே உள்ளது. இதன் காரணமாக உற்பத்தித்திறனில் அதனுடைய பங்களிப்பு குறைவாகவே உள்ளது. உற்பத்தி தசாப்தமாக 1996 - 2006 ஆம் ஆண்டுகள் உருவாக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் இப்போது முன்னெடுக்கப்படுகிறது.

இலங்கை தனது உற்பத்தித்திறனை அபிவிருத்தி செய்வதற்காக, 1963 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டப்பிரிவுடன் தேசிய வியாபார முகாமைத்துவ நிலையத்துடனும் இணைந்து, இலங்கை தேசிய உற்பத்தித்திறன் நிறுவனத்தை ஆரம்பித்தது. இதன்படி இந்த நிறுவனம் 1993 ஆம் ஆண்டு மூன்று திட்டங்களை அறிமுகப்படுத்தியது.

* கைத்தொழில் துறைக்கான தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கல்.
* பாடசாலைப் பிள்ளைகளுக்கான உற்பத்தித்திறன் விழிப்புணர்வுத் திட்டம்.
* தேசிய உற்பத்தித்திறன் உடன்படிக்கை.



இவற்றின் ஊடாக உற்பத்தித்திறனை விருத்தி செய்யமுடியும் எனக் கருதி, செயற்திட்டங்களை முன்னெடுத்தது.

உற்பத்தித்திறன் வளர்ச்சிக்கு அரசு ஆதரவு வழங்கிவருவதன் ஒரு பகுதியாக, 1995 ஆம் ஆண்டு - நாட்டில் ஒரு மாநாட்டை நடத்தியது. இதில் தொழிற்சங்கங்கள் வேலைகொள்வோர், வங்கியாளர்கள் போன்ற பல தரப்பினரும் உள்வாங்கப்பட்டதுடன், ஒரு துறை முன்னேற்றத்தில் மட்டும் கவனம் செலுத்தாது. விவசாயம், கைத்தொழில், கடற்தொழில், காட்டுத் தொழில், கால்நடை வளர்ப்பு, பெருந்தோட்டம், வங்கித்துறை, போக்குவரத்து, சுகாதாரம், பாடசாலை போன்ற மேலும் பலதுறைகளில் உற்பத்தித்திறன் அதிகரிக்க நடவடிக்கை எடுத்தது.

இத்துடன் உற்பத்தித்திறன் வளர்ச்சிக்கு - அரசாங்கம் பல புதிய திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளது.

### தேசிய உற்பத்தித்திறன் நிறுவனம்

இது ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட பிரிவும், தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனமும் இணைந்து உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இதில் பல செயன்முறைகள் அரச, தனியார் துறையினரின் உற்பத்தித்திறனை உயர்த்த உதவியுள்ளது. இதன் ஒரு அங்கமாக தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் இரண்டு வழிகளில் தனது நடவடிக்கைகளைச் செய்துவருகிறது.

1. **முகாமைத்துவ அபிவிருத்தி**
2. **தொழில்நுட்ப அபிவிருத்தி**

### ஆர்வத்தை அதிகரித்தல்

தேசியரீதியான வினைத்திறன் சம்மந்தமாக, விருது வழங்கும் திட்டம் இதனூடாக புதிய தொழில் நுட்பம் உள்வாங்கப்பட்டு உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்தல்.

### உற்பத்தித்திறன் தசாப்தம்

இது நாட்டின் அனைத்து துறையையும் விருத்தி செய்யவேண்டும் என்பதற்காக 1996 - 2006 ஆம் ஆண்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக நாட்டின் உற்பத்தித்திறனை வளர்ச்சி அடையச் செய்யமுடியும் என்பதே எண்ணமாகும். சிங்கப்பூரிலுள்ள உற்பத்தித் திறன் செயலகம்போன்று உருவாக்கப் படத் திட்டமிடப்பட்டிருந்தது.

### தொழிற்திருப்தியை அதிகரித்தல்

ஊழிய திருப்தி மூலம் உற்பத்தித் திறனை அதிகரிக்கமுடியும். இதனூடாக நிறுவன உற்பத்தித் திறன் அதிகரிக்கும் என்பதால், அரசு இதற்காகப் பல சட்டங்களை இயற்றியுள்ளது. விபத்துக்களிலிருந்து பாதுகாப்பு, நல்ல வேலைச்சூழ் நிலையை ஏற்படுத்த முயற்சித்தத்துடன், தொழிலாளர் திருப்தியில் பல நிறுவனங்கள் அவரது தனிப்பட்ட திருப்தியையும் புரிந்து, நிறை வேற்ற முயற்சிக்கின்றன.

### உற்பத்தித்திறனை அபிவிருத்தி செய்ய எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள்

* உற்பத்தித்திறன் விருத்தி தொடர்பான பயிற்சிகளில் தனியார் துறையையும் இணைத்தல்.
* உற்பத்தித்திறன் வளர்ச்சி - கிராம மட்டத்தில் கருத்து ஏற்பட வழிவகுத்தல்.
* உற்பத்தித்திறன் வளர்ச்சியில் பெரிதும் எதிர்நோக்கப்படும் நிதிப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தல்.
* சில அரசதுறையில் வேகமின்மை, வேலையில் வெறுப்புப்போக்கும் காணப்படுகிறது. அவர்களையும் உற்பத்தித் திறன் அதிகரிப்பில் பங்கு பற்றச்செய்தல்.
* கல்வித்துறையில் பயிற்சியுடன் கூடிய கல்விமுறையை அபிவிருத்தி செய்தலும், மாணவர்மீது காணப்படும் எதிர்காலம் பற்றிய வெறுப்பையும் நீக்குதல்.

அதாவது ஆசிரிய தொழிலை விரும்பாத ஒருவர் அந்தத் துறையில் தனது வருகையைச் செய்வாராயின், அவருக்கு இந்தத் தொழில் வெறுப்பாகவே காணப்படும்.

எனவே, அவரை வேறு தொழிலுக்குள் உள்வாங்கல். இதற்குப் புதிய தொழிற்பிரிவின் விருப்புத்தன்மை அறியப்பட வேண்டும்.

**- வணிகன் -**

# மேலாண்மை என்பது செயல்முறை சார்ந்தது

### மேலாண்மை என்றால் என்ன?

நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்படும் பொழுது அதற்கெனச் சில குறிக்கோள்களை உருவாக்கிக்கொள்ளும். குறிக்கோள்கள் இல்லாத நிறுவனங்கள் இருக்க முடியாது. நிறுவனத்துக்கேற்ப அந்தக் குறிக்கோள்கள். இலாப நோக்கிலானவையாக அல்லது சேவை நோக்கிலானவையாக இருக்கும். மேலும் இந்தக் குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்ற, மனிதர்கள் நிறுவனத்தால் உள்வாங்கப்படுவார்கள். இவ்வாறு உள்வாங்கப்பட்ட மனிதர்களை நிறுவன குறிக்கோள்களை நோக்கி இயங்கச் செய்வதே மேலாண்மையாகும்.



மனிதர்களைக் கொண்டு, அவர்கள் மூலம் சாதிக்கக்கூடியவற்றைச் சாதித்துக் கொள்வதே மேலாண்மைக் கலையாகும். இன்று மேலாண்மையோடு தொடர்புபடுத்தப்படாத துறையே இல்லையெனலாம். அறிவியல் அடிபபடையில் மனித வளங்களுடன் பிற வளஙகளை இணைத்து, குறைந்த முயற்சியில் நிறைந்த விளைவுகளை ஏற்படுத்தித்தரும் திறமையே மேலாண்மையாகும்.

### மேலாண்மை நிர்வாகம்

மேலாண்மை என்னும் சொல்லும், நிர்வாகம் என்னும் சொல்லும் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், இரண்டுமே வேறுபடுத்தப்பட்டும், ஒன்றுபடுத்தப்பட்டும் செயற்படுத்தப்படுகினறன. நிர்வாகம் - உயர் நிலையில் கொள்கை உருவாக்கம், திட்டமிடல், இலக்கு நிர்ணயம் ஆகியவற்றைக் குறிக்கோள் அடிப்படையில் வகுப்பதாகும்.

மேலாண்மை - எல்லா நிலைகளிலும் செயற்பட்டு, விளைவுகளை ஏற்படுத்தித் தருவதாகும். **நிர்வாகம் என்பது** - சிந்தனை சார்ந்தது. **மேலாண்மை என்பது** - செயல்முறை சார்ந்தது. எனினும் மேலாண்மை, நிர்வாகத்தை உள்ளடக்கியது என்றே வணிக நிறுவனங்களால் கருதப்படுகிறது. இதற்குக் காரணம், வணிக நிறுவனங்களின் மூலதன உரிமையும், நிர்வாகமும் பிரிக்கப்பட்டு இருப்பதால் ஆகும்.

பொதுவாக, நிர்வாகம் என்னும் சொல்லை அரசத்துறைகளும், அரசநிறுவனங்களும் பயன்படுத்துகின்றன. மேலாண்மை என்னும் சொல்லை வணிக நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன. இரண்டிலும் பயன்படுத்தப்படும் திறமை மேலாண்மையேயாகும்.

மேலாண்மையின் மேல்நிலையில் நீண்ட காலத் திட்டங்கள், கொள்கைகள், இலக்குகள் ஆகியவை உருவாக்கப்படுவதோடு, அவற்றின் சாதனைகள் பரிசீலிக்கப்படுகின்றன. இடை நிலையில் நீண்டகாலத் திட்டங்கள், குறுகிய காலத் திட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, அவை செயற்படுத்தப்படுகின்றன.

திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல், வேலைக் கமர்த்தல், ஊக்குவித்தல், தகவலளித்தல் ஆகியவை மூலம் சாதனைகள் எட்டப்படுகிறது. அடிநிலையில் அன்றாடச் செயற்பாடுகள் மூலம் - அன்றாட இலக்குகள் எட்டப்படுகின்றன. மேற்பார்வை, பயிற்சி, கட்டுப்பாடு ஆகியவை மூலமாக ஒழுங்கு பராமரிக்கப்பட்டு, விளைவுகள் எட்டப்படுகிறது. இந்த மூன்று நிலைகளிலும் மேலாண்மைப் பணியைச் செய்பவர்கள் மேலாளர்கள் ஆவார்கள்.

### மேலாளர் என்பவர் யார்?

மேலாளர் என்பவர் விளைவுகளை ஏற்படுத்துபவர். தன்னைச் சுற்றி நிறுவனத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை விழிப்புடன் கண்காணித்து, தனது நிறுவனத்தைக் காத்து நிற்பவர். நிறுவனத்தின் வளங்களைத் திறம்படப் பயன்படுத்தி, அவற்றின் உற்பத்தித்திறனை மேம்படுத்துபவர். சந்தையிலுள்ள போட்டியாளர்கள், தொழிலிலுள்ள தொழிற்சங்கத்தினர் ஆகிய அனைவரின் போக்கையும் விழிப்புடன் உணர்பவர். நிறுவனத்தின் எதிர்காலத்தைத் திட்டமிடுபவர்.

பல்வேறு நிலைகளில் தம் கீழ்ப் பணியாற்றுபவர்களின் பணியை ஒருங்கிணைப்பவர். பணியாளர்களின் திறமையை வளர்க்கத் தேவையான பயிற்சிகளை அளிப்பவர். அவர்களுடைய முயற்சியை ஊக்குவிப்பவர். திட்டம், கொள்கை, உத்தி, வரவு - செலவு, தொழில்நுட்பம் ஆகியவை பற்றிய தகவல்களை முறையாகக் கொடுப்பவர். உற்பத்திப் பொருட்களின் தரம், அளவு, முகவிலை, உற்பத்திநேரம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துபவர்.

தொழில்நுட்பம், பொருளாதாரம், அரசியல், சமூகம் ஆகியவற்றின் மாற்றங்களைக் கூர்ந்து நோக்கி, அவற்றுக்கேற்ப, தன் நிறுவனத்தில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்துபவர். புதுமைகளை அறிமுகப்படுத்துபவர்.

தம்முடைய பிரிவுக்கு அல்லது குழுவுக்குத் தலைவராகச் செயற்படுபவர். தன்னுடன் பணியாற்றுபவர்களின் குழு ஒழுக்கத்தைப் பராமரிப்பவர். அவர்களிடையே சிறந்த மனித உறவுகளை வளர்த்து, அன்றாடச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பவர். ஒவ்வொருவரிடமும் இருக்கும் ஆற்றலை வெளிக்கொண்டு வருபவர். **இத்தனை பணிகளையும் தானே நேரடியாகச் செய்யாமல், உரியவர்களைக் கொண்டு நிறைவேற்றுவதே மேலாளரின் தனித்திறமையா...**

(தொடரும்...

# மாவீரர்களின் தியாகமும் அர்ப்பணிப்பும் சமாதான சூழ்நிலையை உருவாக்கியது!

## மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம்

எமது மாவீரர்களின் தியாகமும் அர்ப்பணிப்புமே இன்றைய சமாதான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது என, தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் தெரிவித்தார்.

புலிகளின் குரல் நிறுவனத்தின் அமலன் அரங்கில் குரல் ஒலிப் பதிவாளரும், ஒலிபரப்பாளருமான மேஜர் ஜீவா திருமாறனின் வீர வணக்க நிகழ்வு - கடந்த திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று தமிழினம் உலகின் முன் தலைநிமிர்ந்து நிற்கும் நிலையை உருவாக்கியவர்கள் மாவீரர்களே. இவர்களின் அர்ப்பணிப்புக்களும், தியாகங்களும் தமிழினத்துக்கு விரைவில் ஒரு நல்வழியைக் காட்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தலைமையுரையை நிகழ்த்திய, புலிகளின் குரல் நிறுவன நிர்வாக இணைப்பாளர் இராஜேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில் -

புலிகளின் குரல் ஆரம்பகால வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர் மேஜர் ஜீவா. போர் நெருக்கடிகள் சூழ்ந்திருந்த காலத்தில் இளம் வயதைக் கொண்ட இவர், தனது திறமைகள் மூலம் புலிகளின்குரல் ஒலிப்பதிவு, ஒலிபரப்புப் பணிகளில் பெரும் பங்காற்றிய போராளியாகத் திகழ்ந்தவர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கண், காது குறைபாடுள்ள மாணவருக்கு துணுக்காயில் பரிசோதனை முகாம்!

துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் கண், காது குறைபாடுகளுள்ள மாணவர்களுக்கான பரிசோதனை முகாம் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தப் பரிசோதனை முகாம் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், ஏற்கனவே விண்ணப்பிக்கத் தவறிய மாணவர்கள் பரிசோதனை முகாம் நடைபெறும் நாளன்று, பாடசாலை அதிபருடன் சமூகமளிக்குமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் தெரிவித்தார்.

இந்தப் பரிசோதனையின் பின் விசேட தேவையுள்ள மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடி, காது கேட்கும் உபகரணம் என்பன வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமரமுடியாத நிலையில்!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு, மண்டலாய், தாளையடி, முள்ளியான் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர முடியாத நிலை காணப்படுகிறது.

இந்தப் பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு வெடிபொருட்கள் தடையாகவுள்ளன என, வடமராட்சி மக்கள் புனர்வாழ்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரதேசங்களில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் பெருமளவிலான வெடிபொருட்களைப் புதைத்துவிட்டுச் சென்றுள்ளனர். இந்த வெடிபொருட்கள் உரியகாலத்தில் அகற்றப்படாமையால் இங்கு மக்கள் மீளக் குடியமர முடியாத நிலை காணப்படுவதுடன், அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவும் முடியாத நிலை காணப்படுகிறது.

அத்துடன், இந்த வெடிபொருட்களால் இங்கு அபாயநிலை காணப்படுகிறது. இதனால் புனர்வாழ்வு நடவடிக்கைகள் எதனையும் தம்மால் மேற்கொள்ள முடியாதுள்ளதாக வடமராட்சி மக்கள் புனர்வாழ்வு நிறுவனம் தெரிவித்தது.

# பெண்களுக்கெதிரான வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை!

(வவுனியா)

பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்து வருவதாகவும் இதைக் கட்டுப்படுத்த சகல தரப்பினரும் முன்வரவேண்டும் எனவும் வவுனியா அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்தார்.

ஒக்ஸ்பாம் நிறுவனத்தில் வவுனியா நகர மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள், வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பனை நடுகைக்கு 60 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திலிருந்து 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தின் பனை நடுகைத் திட்டத்துக்கு 60 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய கணினிக் கற்கை நெறி வகுப்பறை திறப்புவிழா!

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில், பொருண்மிய மதியுரையகத்தால் அமைக்கப்பட்ட கணினி கற்கை நெறி வகுப்பறை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்தத் திறப்புவிழா நிகழ்வு நேற்றுமுன்தினம் நண்பகல் 11 மணிக்கு புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய அதிபர் சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா ஏற்றி வைத்தார். தமிழீழ 'தேசியக் கொடியை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். கணினிக் கட்டடத் தொகுதியை பொருண்மிய மதியுரையகத் தலைவர் பேராசிரியர் நவரட்ணராஜா திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் - கருத்துரைகளை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, பேராசிரியர் நவரட்ணராஜா ஆகியோர் நிகழ்த்தினர்.

## வன்னிப் பிரதேசம் எங்கும்

# மாவீரர் நாளை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடு

எதிர்வரும் 27 ஆம் திகதி தமிழர் தாயகப் பகுதியெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் நாள் நிகழ்வுகள் வன்னிப் பகுதியெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதன்படி,

கிளிநொச்சி - பளைப் பிரதேசத்தில் தமிழீழ மாவீரர்நாள் செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தமாதம் 27 ஆம் திகதி தமிழீழ மாவீரர்நாளை வெகுசிறப்பாகக் கொண்டாடும் வகையில், முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இந்தக் காலப்பகுதியில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு, சிரமதானப் பணிகள் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேபோன்று முல்லைத்தீவு, துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேசங்களிலும் மாவீரர்நாள் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், வன்னிவிளான் குள மாவீரர் துயிலும் இல்லம், ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் என்பன பொது அமைப்புப் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் ஆகியோரால் அலங்கரிக்கப்பட்டு வருகின்றது. இத்துடன் இந்த ஆண்டு தமிழீழ மாவீரர் நாளை முன்னெடுப்பது தொடர்பாக பிரதேச ரீதியாகச் செயற்பாட்டுக்குழு தெரிவு செய்யப்பட்டு வருகின்றது.

இந்தவகையில் பாலிநகர், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், யோகபுரம் ஆகிய பகுதிகளில் செயற்பாட்டுக்குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மற்றும் வடமராட்சி கிழக்கில் மாவீரர்நாள் செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாக பொது அமைப்புக்கள், பாடசாலைகள், முன்பள்ளி ஆகியன இணைந்து துயிலும் இல்லங்களை அலங்கரிக்கும் பணிகளை முன்னெடுத்து வருகின்றன.




வவுனியா மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மங்கள விளக்கை பிரதேச செயலர் திருமதி பி.எம். எஸ்.சாள்ஸ் ஏற்றிவைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (படங்கள் : கனகரவி)

## திலீபன் மருத்துவமனையில் வெளிநாட்டு மருத்துவ குழு சிகிச்சை

(கிளிநொச்சி)

கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவ நிலையத்தில வெளிநாட்டு மருத்துவ குழுவினரால் குழந்தைகளுக்கு இதய நோய் சம்பந்தமான சிகிச்சையும், பொது மருத்துவ சிகிச்சையும் இன்று இடம்பெறவுள்ளன.

இந்த மருத்துவ சிகிச்சையில் பயன்பெற விரும்புவோர் இன்று காலை 9 மணிமுதல் மாலை 3.30 மணிவரை சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தியாகதீபம் திலீபன் மருத்துவ மனையின் கற்சிலைமடு மருத்துவமனையினர் தெரிவித்தனர்.

## பயிற்சிப் பட்டறை

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தால் சிறுவர் உரிமைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறைகள் நடைபெறவுள்ளது.

பூநகரி, ஆலங்கேணி, முழங்காவில், ஜெயபுரம், குமுழமுனை, நாச்சிக்குடா, கண்டாவளை, வட்டக்கச்சி ஆகிய இடங்களில் இந்தப் பயிற்சிப் பட்டறைகள் இடம்பெறவுள்ளன.

சிறுவர்களின் உரிமைகள், சிறுவர்களின் கவின்கலை நிகழ்வுகள் என்பன இந்தச் சிறுவர்கள் பயிற்சிப் பட்டறையில் இடம்பெறவுள்ளன.

# உலக உணவுத் திட்ட வேலைகள் மேலும் முன்னெடுக்கப்படவேண்டும்

## அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன்

மக்களுடைய பொருளாதாரத்தை வளப்படுத்தும் வகையில் உலக உணவுத்திட்ட வேலைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என, அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

இலங்கை உணவுத் திட்டத்தின் பிரதிநிதியும், கிரிக்கெட் சாதனையாளருமான முத்தையா முரளிதரன் தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் இந்தச் சந்திப்பு பூநகரி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றிய தங்கன் அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கையில் -

'தாயகப் பகுதிகளில் உலக உணவுத் திட்டத்தின் வேலைத்திட்டங்கள் போரால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கும், மாணவர்களுக்கும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. இந்தத் திட்டத்தை தொடர்ந்து விரிவுபடுத்தவேண்டும். என்பதுதான் எமது எதிர்பார்ப்பு.

இந்த வேலைத்திட்டங்கள் நீண்ட நோக்கத்திலானவை. இவ்வாறு நீண்ட நோக்கத்திலான இலக்குகளைக் கொண்டு மக்களுடைய பொருளாதாரத்தை வளப்படுத்தவேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பும் என, அவர் மேலும் தெரிவித்தார்.

# முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் வீதிகள் புனரமைக்கப்படவில்லை

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 98 சதவீதமான சிறு வீதிகள் புனரமைப்புச் செய்யவேண்டிய நிலையில் உள்ளது எனப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தே.தயானந்தா தெரிவித்தார்.

இந்தப் பிரதேச வீதிகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 517 சிறு வீதிகள் உள்ளன. இவற்றுள் 98 சதவீதமான வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் படு மோசமாகச் சேதமுற்றுக் குன்றும் குழியுமாகக் காணபபடுகிறது.

இதனால் இந்தப் பகுதி மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்துஇருந்து
மாணாத செய்பவன் பகை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## இந்திய - இலங்கை பாதுகாப்பு உடன்பாடு இலங்கைக்கு நன்மையளிக்குமா.....

விரைவில் கைச்சாத்திடப்படவிருக்கும் இலங்கை - இந் திய பாதுகாப்பு உடன்படிக்கையால் யார் நன்மையடையப் போகிறார்கள் என்பது பிரச்சினையல்ல, யார் பாதிப்புக்குள்ளா கப் போகிறார்கள் என்பதே இப்போதைய கேள்வியாகும்.

இந்த இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடானது இலங்கைக்கே அதிக நன்மையளிக்கும் என்று கொழும்புக்கு அண்மையில் விஜயம்செய்த இந்திய இராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் என்.சி.விஜ் என்பவர் தெரிவித்துள்ள போதிலும், இலங்கையின் நலனில் உள்ள அக்கறை மிகுந்த பொறுப்பார்வத்தால் இந்த உடன்பாட்டை மேற்கொள்ள இந்தியா தீவிரம் காட்டுகிறது என்று எவரும் கருதினால் அது பொய்யானது என்பதை உணர்ந்து கொள்வதற்கு கனகாலம் எடுக்காது என்றே கூறவேண்டும்.

1987 இல் இப்படித்தான் இலங்கை - இந்திய உடன்பா டொன்றை அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா, அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் இணைந்து மேற்கொண்டபோதும், இந்தியா இலங்கையின் நன்மைக்காக, இலங்கைத் தமிழ்மக்களின் பாதுகாப்புக்காக அந்த உடன்பாட்டை செய்ததாகத் தம்பட்டம் அடித்து ஏமாற்றி, பேய்க்காட்டியவரலாறு இலகுவில் மறக்கக் கூடிய ஒன்றல்ல.

அந்த ஒப்பந்தம் இலங்கைத் தமிழ்மக்களின் இறைமைக் கும் அரசியல் உரிமைக்கும் வைக்கப்பட்ட தீப்பந்தமாக மாறியதை தமிழினம் இன்னமும் நினைவில் பதித்தே வைத் துள்ளது.

ராஜீவ் காந்தியை ஜே.ஆர் ஏமாற்ற, தமிழ்மக்களை ராஜீவ் காந்தி ஏமாற்றிய சரித்திரத்தை அந்த ஒப்பந்தம் நினைவு படுத்திக் கொண்டே உள்ளது. அந்த ஒப்பந்தம் தமது துன்பியல் நிறைந்த அடக்குமுறை வாழ்வுக்கு விடியலைத்தரும் என நம்பிய அப்பாவி ஈழத்தமிழ் மக்களை, இராணுவ முற்றுகைக் குள்ளாக்கிக் கொடுமைப்படுத்திய கிட்டத்தட்ட இரண்டரை ஆண்டு கால இந்தியப் படையின் அட்டூழியங்கள் நிறைந்த ஆட்சியானது, தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை சில தசாப்தகாலம் பின்தள்ளிய வரலாற்றுக் கொடுமையை மட்டுமே தமிழர் தம்தாய மண்ணில் நிறைவேற்றி முடித்தது என்பதே உண்மையாகும்.

ஆனாலும், போராட்டம் ஓயவுமில்லை, தமிழ்மக்கள் விடுதலைக்கான தமது போராட்ட உணர்வை அந்த ஒப்பந்தம் மழுங்கடிக்க அனுமதிக்கவுமில்லை.

பிரேமதாஸ ஆட்சி 'கெட்அவுட்' என்று சொல்லவேண்டிய நிலை வருமுன்பே இலங்கையை விட்டு வெளியேற வேண்டிய அவலம் இந்தியப் படைக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கும் ஏற்பட்டது.

அந்த ஒப்பந்தத்தை வைத்துக்கொண்டு இந்தியா நடத்திய அதிகார கூத்து அர்த்தமற்ற ஒன்றாக ஆனதுடன், இந்திய - இலங்கை ஒப்பந்தமானது புலிகளுக்கும், இந்தியப் படைக்கும் இடையே மோதலை ஏற்படுத்தி - இந்தியாவுக்கும், தமிழ் மக்க ளுக்கும் இடையேயான வரலாற்று ரீதியான, கலாசார ரீதியான உறிவினில் விரிசலை ஏற்படுத்தமட்டுமே உதவியது எனலாம்.

அந்த ஒப்பந்தம் இந்தியாவின் அரசியல் மற்றும் இராணுவ நலன்களைக் கவனத்தில்கொண்டு இலங்கைத் தமிழர் விவ காரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஒரு திட்டமிட்ட நடவடிக்கையேயாகும்.

அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே திருமலைத் துறைமுகப்பகுதியில் உள்ள எண்ணெய் சேமிக்கும் குதங் களை இந்தியா குத்தகை அடிப்படையில் தன்வசமாக்கி வைத் துள்ளது. எப்படியாயினும் எல்லாவகையிலும் அந்த உடன்பாடு இந்தியாவுக்கு இலாபகரமானதாகவே அமைந்துள்ளதென லாம்.

அதில் பாதிப்புற்றதும், நஷ்டப்பட்டதும், ஏமாற்றப்பட்டதும் ஈழத்தமிழ் மக்களேயாவர்.

இந்தியா அதன் மூலம் சில வரலாற்று அவலங்களையும், அவமானங்களையும் சந்திக்க நேர்ந்தமைக்கு ஜே.ஆர்.ஜெய வர்த்தனா அந்த ஒப்பந்தத்தை தந்திரோபாயமாகக் கையாண்ட மையும் முக்கிய காரணமாகும்.

அது நடந்து முடிந்த விடயமானாலும், அந்த வரலாற்றிலி ருந்து இந்தியா பாடமெதையும் கற்றுக்கொள்ளவில்லை என் பதையே இப்புதிய பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு குறித்த நகர்வுகள் உணர்த்தி நிற்கின்றதெனலாம்.

இந்தப் புதிய உடன்பாடு இலங்கையின் நன்மையையே கருத்திற்கொண்டது என்று கூறப்படுவது நகைப்பிற்குரிய விடய மேயாகும்.

இந்த உடன்பாடு எல்லாவகையிலும் சமாதான முயற்சிக ளுக்குப் பாதுகாப்பானதல்ல என்பதையும், இது புரிந்துணர்வு உடன்பாட்டின் - போர்நிறுத்த உடன்பாட்டின் விதிமுறைகளை மீறுவதாக, இராணுவச் சமநிலை என்ற முக்கிய அம்சத்துக்கு முரணானதாக உள்ளது என்பதை கவனத்தில்கொள்வது அவசியமாகும்.

இலங்கைக்கு இப்போது நன்மை தரக்கூடிய ஒரேயொரு முக்கிய விடயம் சமாதான முயற்சிகள் முன்னெடுப்பதேயாகும்.

அதனைக் குழப்பும், அதற்கு அச்சுறுத்தலாக விளங்கும் எந்த விடயமும் இலங்கைக்குப் பாதிப்பையே ஏற்படுத்தும்.

அந்த வகையில் இப்புதிய உடன்பாடு இலங்கைக்கு அதிக நன்மை தரும் என்று இந்தியத்தளபதி கூறுவதானது அர்த்த மற்ற விடயமேயாகும்.

# நாடும் நடப்பும்




# 'ஊர் உள்ளம் உயர்தல்' ஆற்றுகை வலிமேற்கில் அரங்காற்றுகை!

(யாழ்ப்பாணம்)

அரங்கச் செயற்பாட்டுக்குழுவால் ஊர் உள்ளம் உயர்தல் என்ற நிகழ்சித்திட்டதுக்கிணங்க, கிராமங்கள் தோறும் தெருவெளி அரங்க ஆற்றுகை நடாத்தப்பட்டு வருகிறது. கிராமங்களில் மக்களின் தேவைகள் பிரச்சினைகளை அறிந்து அவர்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் நோக்கில் அராலி, வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம், தொல்புரம், சித்தங்கேணி, மூளாய் போன்ற இடங்களில் தெருவெளி அரங்க ஆற்றுகைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

இந்த ஆற்றுகையில் மக்கள் ஆர்வத்தோடு பங்குபற்று வதுடன், வீதிகள் புனரமைப்பு, குடிநீர், குடியிருப்பு சுகாதாரம், மலசலகூடம், விளையாட்டு மைதானம், பொதுசன சமூக நிலை யம் போன்ற தமது அடிப்படைத் தேவைகளைப் பற்றியும், இளைஞர்கள் யுவதிகளுக்கான வேலையில்லாப் பிரச்சினை, கடற்றொழிலாளர்களுக்கான பாஸ் அனுமதி போன்றவற்றால் தாம்படும் இன்னல்கள் போன்றவற்றை வெளிக்காட்டுவதையும் காணலாம்.

போர் ஓய்வுக்கு வந்து சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக் கப்படும் தமது இந்த இன்னல்கள் தீர்க்கப்படாமை குறித்து தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

இந்த ஆற்றுகையில் கலந்து கொண்டு இந்தப் பிரச் சினைகள் முற்றுமுழுதாக தீர்க்கப்படுவதற்கு இங்கு நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும். எம் ஊர்களை ஆக்கிரமித் துள்ள இராணுவம் எம்மிடங்களை விட்டுப்போக வேண்டும். புலிகளின் நிர்வாகம் இங்கு ஏற்படவேண்டும். போன்ற தமது அரசியல் அபிலாசைகளையும் வெளிப்படுத்தி வருகின்றனர். இந்த ஆற்றுகைகள் தொடர்ந்தும் ஏனைய இடங்களில் மக்கள் மையங்களில் ஆற்றுகை செய்யப்பட்டு வருகிறது.

## இடைநிலை கல்வித்தர உயர்வுக்கு 35 மில்லியன் ரூபா கடனுதவி

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கையின் இடை நிலைக் கல்வியின் தரத்தை உயர்த்தும் திட்டத்துக்கு 35 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாக வழங்க அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையின் இடைநிலைக் கல்வியின் அடிப்படைப் பிரச்சினைகள் அதாவது சர்வதேச ரீதியில் ஒப்பிடும் போது புற்றாக்குறையாகவுள்ள கல்வித் தரத்தை உயர்ததவே இந்த நிதி வழங்கப்படுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுளதாவது -

இந்தத் திட்டம் கற்றல், கற்பித்தல், மூலாதாரங்கள், ஆசிரியர் களின் திறமை என்பன ஏற்றுக்கொள்ளத்தக்க தரத்தை இன்றும் அடையாத ஆயிரம் பாடசாலைகளின் தரத்தை உயர்த்த உதவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில கல்விக்காகச் செலவிடும் பணவீதம் குறைவு எனவும் அதில் குறிப்பிடப்பட் டுள்ளது. இந்தக் கல்வித் திட்டத்துக் கானமொத்த மதிப்பீடு 47 மில்லியன் டொலர்களாக வுள்ளபோதும், அரசால் 103 மில்லியன் டொலரே ஒதுக்கமுடிகிறது.

(17)

## யுத்தத்தால் வீடுகளை இழந்த கல்வித் திணைக்கள ஊழியர்களின் விபரங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்தத்தால் வீடுகளை இழந்த ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள ஊழியர்களின் விபரம் கோரப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான கல்விச் சேவை ஊழியர்களின் தொழிற சங்கக் கூட்டமைப்பு அண்மையில் இலங்கை ஆசிரியர் சங்கச செய லாளர் பேர்டி.பி.இரணவீரகே தலைமையில் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாராடி மெலலைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

இதற்கமைவாக நாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தமக்குச் சொந்தமான வீடுகளை இழந்தோ, வீடுகள் சேதமாக்கப்பட்டு, வேறு இடங்களில் தற்போது வசிப்பவர்கள். அவர்கள் தமது சொந்த இடத்தில் மீளக் குடியமர்ந்து நஷ்டஈடு பெறும்வரை அவர்களுக்குரிய வாடகையை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் காங்கே சன்துறைவீதி கொக்குவிலிலுள்ள இலங்கை ஆசிரியர்சங்க அலுவலகத்தில் யாழ்.மாவட்ட செயலாளரிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, 21.11.2004 ஞாயிற்றுக்கிழமை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தோர் எதிர்வரும் திங்கள் முதல் குறிப்பிட்ட இடங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற ஒழுங்கு செய்யப்படுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (101)

## சட்டவிரோத ஆயுதங்கள் கையளிப்பு இறுதிநாள் இன்று!

(கொழும்பு)

நாட்டில் சட்டவிரோத ஆயுதங்களைக் கையளிக்கும் இறுதி நாள் இன்றாகும். இதன்படி தம்வசமுள்ள ஆயுதங் களைக் கையளிக்கத் தவறுவோர் நீதியின் முன்னர் நிறுத்தப் படுவர் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை சுமார் 2 ஆயிரம் ஆயுதங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

எனினும் இன்னும் சுமார் 30 ஆயிரம் ஆயுதங்கள் சட்டவிரோதமாக நாட்டில் மறைத்து வைக்கப்பட்டுள் ளதாக சந்தேகிக்கப்படுகிறது. 1995 ஆம் ஆண்டு காலப் பகுதியின் பின்னர் இராணுவத்திலிருந்து சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தப்பியோடியுள்ளமையால் அவர்கள் எடுத்துச் சென்ற ஆயுதங்களின் தொகை இந்தப் பட்டியலில் சேர்க்கப் படவில்லை. (01)

## வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக கூறி பணமோசடி செய்த பெண் கைது

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து, பணம் பெற்று ஏமாற்றிய பெண் முகவர் ஒருவரை வவுனியாப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

றாகம வெலிகந்தயைச் சேர்ந்த யோசப் யோகசுந்தரி (வயது 55) என்பவரே வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, வவுனியா நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட வேளை, இவரை எதிர் வரும் 12 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து வவுனியா பாவற்குளத்தைச் சேர்ந்த தில்லைராஜாவிடமிருந்து 3 இலட்சம் ரூபாவும் மலேசியாவுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பட்டாணிச் சூறையைச் சேர்ந்த இலங்கைரத் தினத்திடம் 1 லட்சம் ரூபாவும், கனகரத்தினம் செந்தில் காந்தனிடம 80 ஆயிரம ரூபாவும் மற்றும் 3 பேரிடம் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் பெற்றுள்ளார்.

பணத்தைப் பெற்று நீண்ட காலமாகியும் வெளிநாட்டுக்கு அனுப்பாததால், அதிருப்பதியடைந்த இவர்கள் பொலிஸா ருக்குச் செய்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் கைது செய்து வவுனியா நீதிமன்றில் ஆஜர் செய்தபோது அந்தப் பெண்ணை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

சமூகவியல்

நிலாந்தன்

**ஒரு மக்கள் திரளின் வாழ்விடம் அந்த வாழ்விடம் சார்ந்த பொருளாதாரம் அது சார்ந்த பழக்கவழக்கங்கள்த நம்பிக்கைகள், விழுமியங்கள், இவற்றோடு இவற்றால் தீர்மானிக்கப்படும் அரசியல் என்பவற்றாலேயே பெரிதும் தீர்மானிக்கப்படுகின்றன. எனவே ஒவ்வொரு சமூகமும் அது சார்ந்த சமூக, பொருளாதார, அரசியல் காரணிகளுக்கு ஏற்ப எது மேன்மையானது என்பதைத் தீர்மானிக்கின்றது. அதாவது எது மேன்மையானது என்பது இங்கு ஒரு சார்பு நிலைக் கருத்துருவமே.**

# கலாசாரச் சீரழிவு



அண்மையில் வன்னியில் ஈழநாடு பத்திரிகை கலைஞர் கள், ஊடகவியலாளர்கள் போன்றோருடன் ஒரு சந்திப்பை மேற்கொண்டது.

இந்தச் சந்திப்பின்போது, ஒரு எழுத்தாளர் யாழ்ப்பாணத்தில் நிலவும் கலாசாரச் சீரழிவு என்று சொல்லப்படும் விவகாரத்தைக் குறித்துத் தெரிவித்தார். வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் வன்னிப் பிரதேசம் காணப்படுகிறது. இரு பக்கமிருந்தும் சீரழிவான அம்சங்கள் வன்னிக்குப் பரவும் ஆபத்துக்கள் உண்டு.

சோதனைச் சாவடிகளில் கலாசாரச் சீரழிவுகளைத் தடுக்கக் கூடிய ஏற்பாடுகள் பெரியளவில் இல்லை. எனவே வன்னிக்கும் இவை பரவிவிடுமோ என்று பயமாய் இருக்கிறது என்ற தொனிப்பட அவர் தெரிவித்தார்.

இது குறித்துப் பத்திரிகை கள் மக்கள் மத்தியில் எதையாவது பயன் பொருந்துமான விதத் தில் எடுத்துரைக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித் தார்.

அவர் இதைச் சொன்னபோது, எனக்குச் சில நாட்களுக்கு முன நடந்த ஒரு சம்பவம் தவிர்க்கவியலாதபடி நினைவுக்கு வந்தது. கிளிநொச்சிப் பொதுச்சந்தைக் குப் பின்னால் இருக்கும் ஒரு சலூனுக்கு முடிவெட்டப் போயிருந்தேன்.

எனது நண்பரான அந்தச் சலூனின் உரிமையாளர் என்னிடம் கேட்டார் "நான் சொல்லும் ஒரு விடயத்தைப் பத்திரிகையில் எழுதமுடியுமா?" என்று. அது என்ன விடயம் என்று கேட்டேன். அவர் சொன்னார்... " கிளிநொச்சியிலுள்ள பிரபல மதுச்சாலைகளில் இரவு 8 மணிக்குப் பின் யார் நிற்கிறார்கள் தெரியுமா? நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறோம் வெளிநாட்டிலிருந்து வருபவர்களும் கொழும்பிலிருந்து வரும் சிங்களவரும்தான் இந்த மதுச்சாலைகளைத் தேடிப் போகின்றார்கள் என்று.

ஆனால் உண்மை அதுவல்ல. மேற்சொன்ன தொகையினரை விடவும் ஒப்பீட்டளவில் அதிகரித்த தொகையில் காணப்படுவது எமது இளைஞர்களே. இதைத் தடுத்து நிறுத்த முடியாதா? இது எமது கலாசாரத்தைச் சீரழிக்காதா?" என்று கூறினார்.

நான் அவரிடம் திருப்பிக் கேட்டேன். "உங்களுடைய சலூனுக்கு வரும் இளைஞர்கள் தலை முடியைக் காதோரம் தொடங்கி பிடரி வரையிலும் கோதி எடுக்கும்படி கேட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று. அவர் சொன்னார் - அவர்களின் விருப்பபடி செய்வேனென்று. "திரைப்பட நடிகர்களைப் பார்த்துவிட்டு அப்படி வெட்டுமாறு இளைஞர்கள் கேட்கிறார்கள்.

இதுவும் ஒரு கலாசாரப் பிறழ்வு தான் என்று கூறுவோர் உண்டு. அவர்கள் உங்களிடம் வந்து இப்படிப் புதிய பாணியில் முடி திருத்தவேண்டாம் என்று கேட்டால் நீங்கள் சம்மதிப்பீர்களா? அப்படிச் சம்மதித்தால் உங்களுடைய சலூனைத் தேடிவரும் இளைஞர்களின் தொகை குறையும் அல்லவா? தொழில் போட்டியில் நீங்கள் தோற்றுப் போகநேரிடும் அல்லவா? என்று அதற்கு அவர் மௌனமாகச் சிரித்தார்.

இதுதான் யதார்த்தம். கலாசாரப் பிறழ்வு என்பதற்காகப் புதிய பாணியில் தலை முடியைக் கோதமறுத்து எப்படிச் சலூன்களை மூடிவிட முடியாதோ அப்படித் தான் இளைஞர்கள் குடிக்கிறார்கள்என்பதற்காக நவீன மதுச் சாலைகளை மூடிவிட முடியாது.

வளர்ச்சி என்று வரும்போது அதற்கேயான பிறழ்வான பக்க வளர்ச்சிகளும் வரத்தான் செய்யும். அதற்காக வளர்ச்சியைத் தடுத்துநிறுத்த முடியுமா? யாழ்ப்பாணம் இப்பொழுது துரிதகதியில் பெரு நகரமாகி வருகின்றது.

அதாவது 'கொஸ்மோ பொலற்ரன்' மயப்பட்டு வருகிறது. ஒரு அரசியல் தலைமைத்துவம் இல்லாத வெற்றிடத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் ஒரு பிரதேசம் என்றபடியால் மேற்படி பெரு நகரமயமாதல் அதற்கேயான பிறழ்வுகளையும் நோய்கூறான அம்சங்களையும் கொண்டு வந்திருக்கின்றது.

ஆனால் இத்தகைய நோய்க்கூறான அம்சங்களுக்காக யாழ்ப்பாணம் துரிதகதியில் நகர மயப்படுவதைத் தடுத்து நிறுத்த முடியுமா?

இதை இப்படி எழுதும் போது, இயல்பாகவே சில கேள்விகள் எழும், அவையாவன.. கலாசாரத்தை விடவும் பொருளாதார வளர்ச்சி பெரிதா? பொருளாதார வளர்ச்சிக்காக கலாசாரத்தை சிதைய விடலாமா?

இல்லை, சிதைய விடமுடியாது, ஆனால் இந்தக் கேள்விகளுக்கு முழு அளவில் பதில் சொல்வதாக இருந்தால் அதற்கு முன்பு சில அடிப்படைக் கேள்விகளுக்குப் பதில் கண்டாக வேணடும். அவையாவன -

கலாசாரம் என்றால் என்ன? கலாசார பிறழ்வு என்றால் என்ன, கலாசாரத்துக்கும் பொருளாதாரத்துக்கும் இடையிலான உறவு என்ன? எல்லோருக்கும் பொதுவான கலாசாரம் என்று ஒன்று உண்டா? இருந்தால் அதை எப்படி வரைவிலக்கணப்படுத்து வது? நாம் இப்பொழுது இதற் கான அடிப்படைக் கேள்விக ளுக்கு விடைகாண முயல்வோம்.

முதலாவதாக கலாசாரம் என்றால் என்ன?

கலாசாரம் என்றால், ஒரு மக்கள் திரளின் வாழ்வைப் பண்படுத்துவது மேன்மையுற வைப்பது இதன் மூலம். அந்த சமூகத்தை சமூகக் கூர்ப்பின் அடுத்தடுத்த கட்டங்களுக்கு உயர்த்திச் செல்வது.

ஒரு மக்கள் திரள், எது மேன்மையானது என்று நம்புகிறது என்பது அந்த மக்களின் திரளின் வாழ்விடம் அந்த வாழ்விடம் சார்நத பொருளாதாரம் அது சார்ந்த பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் விழுமியங்கள் இவற்றோடு இவற்றால் தீர்மானிக்கப்படும் அரசியல் என்பவற்றாலேயே பெரிதும் தீர்மானிக்கப்படுகிறது.

எனவே ஒவ்வொரு சமூகமும் அது சார்ந்த சமூக பொருளாதார அரசியல் காரணிகளுக்க ஏற்ப எது மேனமையானது என்பதைத் தீர்மானிக்கிறது. அதாவது எது மேன்மையானது என்பது இங்கு ஒரு சார்பு நிலைக் கருத்துருவமே.

இதன்படி ஒரு சமூகத்துக்கு மேன்மையாய் இருப்பது இன்னொன்றுக்கு காட்டுமிராண்டித் தனமாகத் தோன்றக்கூடும்.

ஒரு சமூகத்துக்கு விழுமியமாய் இருப்பது இன்னொன்றுக்கு சீரழிவாகத் தோன்றக் கூடும் அல்லது ஒரு கால கட்டத்தில் ஒழுக்க மீறலாய் இருப்பது பிறதொரு காலகட்டத்தில் ஒழுக்கமாய் மாறக்கூடும்.

கீழைத்தேயர்களான நாம் இங்கு பார்க்கும்போது, மேற்குலகின் கட்டற்ற பாலியல் வாழ்வு எம்மைப் பொறுத்த வரை ஒழுக்க மீறலாகவும், சீரழிவாகவும் தோனறக்கூடும்.

ஆனால் அவர்களைப் பொறுத்தவரை அது தான் அவர்களுடைய பாலியல் ஒழுக்கம். இது போலவே மேற்கின் மெற்றோ பொலிற்ரன் கூடும்.

எனவே கலாசாரம் எனப்படுவது வெற்றிடத்திலிருந்து வருவதில்லை அது எந்த சமூகத்தின் பொருளாதார மற்றும் உளவியற் காரணிகளின் பிரதிபலிப்பே என்பதால், அது சமூகத்துக்கு சமூகம் வேறுபடமுடியும். அதாவது - கலாசாரம் எனப்படுவது ஒரு சார்பு நிலைப்பட்ட விவகாரமே.

எனவே, பொதுவான கலாசாரம் என்று எதுவும் பிரயோக நிலையில் கிடையாது எனினும், மனிதம் என்ற பொதுத் தன்மை காரணமாக முழு மானிடகுலத்தினதும் மேன்மை குறித்து - அறநெறிகள், கோட்பாடுகள் இருக்க முடியும்தான்.

ஆனால் நடைமுறையில் உலகப் பொதுக் கலாசாரம் என்று ஒன்று கிடையாது. மாறாக பூகோளமயமாதல் என்ற பெயரில் நிகழும் அமெரிக்க மயமாதலை எதிர்க்கும் எல்லா இனங்களும் நாடுகளும் இப்பொழுது ஒன்றை வற்புறுத்துகின்றன அது தான் - பல் கலாசாரத் தன்மை பொருந்திய ஒரு உலகம் ஏனப்படுகி றது.

அதாவது, பொருளாதார அடிபபடைகள் வித்தியாசபபடும் போது, கலாசார வாழ்வும் வித்தியாசப்படுகிறது. அல்லது பொருளாதார வாழ்வு மாறும் போது அது கலாசாரத்திலும் தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

இந்த விளக்கத்திறன் அடிப்படையில் நாம் இனி யாழ்ப்பாணத்துக்கு வருவோம்.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்பு யாழ்ப்பாணம் துரிதகதி யில் கொஸ்மோ பொலிற்றன் மயபபட்டு வருகிறது.

கொஸ்மோ பொலிற்றன் என்றால் - ஒக்ஸ்போட் ஆங் கில அகராதி தரும் பொருளின் படி வெவ்வேறு வித்தியாசமான நாடுகளிலிருந்து வந்த - வித்தியாசமான மக்களைக் கொண்ட, அந்த மக்களின் வித்தியாச மான பண்பாடுகளின் செல்வாக் குக்கு உட்பட்டது என்று இருக் கிறது.

எனவே, இப்படி வெவ்வேறு இடங்களிலிருந்து வருபவர்கள் கூடும் ஓரிடத்தில் - பெரு நகரத்தில் - ஒரு கிராமியப் பண்பாட்டின் அப்பாவித் தனங்களை, வெளிப்படைத் தன்மை, புனிதத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?

யாழ்ப்பாணம் கொஸ்மோ பொலிற்றன் மயப்படத் தேவையான ஊக்கவிசை அனைத்தும் ஏ-9 பாதை வழியாகத்தான் அங்கே போய்ச் சேர்கிறது. இது காரணமாகவே ஏ-9 வழியில் இருமருங்கிலும் குறிப்பாக - கிளிநொச்சியில் ஒருவித பெரு நகரப் பண்பாட்டின் சாயல்களைக் காணமுடிகிறது.

இதன் விளைவே இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட கிளிநொச்சியிலுள்ள மதுச்சாலைகளின் நிலவரமும்.

எங்கெல்லாம் பெருநகர மயமாதல் நிகழ்கிறதோ, அங்கெல்லாம் இப்படியான விடயங்களும் இருக்கும். எனினும், யாழ்ப்பாணத்தில் நிலவரம் தனக்கேயான சில தனித்துவமான பிரச்சினைகளைக் கொண்டிருக்கிறது.

இதில் முதலாவது - யாழ்ப்பாணத்தில் நிலவும் அரசியல் தலைமைத்துவ வெற்றிடம்.

இரண்டாவது - அது படைகளின் பிடியில் இருப்பது.

மூன்றாவது - வெளிநாட்டுக்காசு.

இவை ஒவ்வொன்றையும் சிறிது ஆழமாகப் பார்ப்போம்.

யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சிக்குப்பின் அங்கு தோன்றிய தலைமைத்துவ வெற்றிடம் இன்னமும் நிரவப்படவில்லை.

இப்பொழுது அங்கே புலிகள் நின்றாலும்கூட, மெய்யான அர்த்தத்தில் அரசியல் அதிகாரம் படையினரிடமே உள்ளது. இதனால் அங்கு நிகழும் பெருநகர மயமாதல் திட்டமிடப்படாமலும், முன்யோசனைகள் இன்றியும் நிகழ இடமுண்டு. இது முதலாவது.

இரண்டாவது - அங்கே உள்ள சுமார் 30 ஆயிரத்துக்கும் கூடுதலான துருப்புக்கள் அங்குள்ள சனத்தொகையின்மீது தீர்மானகரமான சில தாக்கங்களை ஏற்படுத்தப் போதுமானவர்களாய் காணப்படுகிறார்கள். தலைமைத்துவ வெற்றிடத்தில் புகுந்து, சீரழிவான அம்சங்களை பரப்ப அவர்களால் முடியும்.

நிலத்தைப் பிடித்து வைத்திருக்கவே அவர்கள் அங்கே நிற்கிறார்கள். சனங்களில் விழுமியங்களைப் பாதுகாப்பதற்கல்ல. அப்படி பாதுகாப்பதென்றால் அவர்கள் அந்த நிலத்தை அதன் சொந்தக்காரர்களிடமே திருப்பித் தந்துவிட்டுப் போய்விடவேண்டும். எனவே, விழுமியங்களின் சிதைவை அங்குள்ள துருப்புக்கள் ஊக்குவிக்கவும், வளர்க்கவும் இடமுண்டு.

மூன்றாவது - வெளிநாட்டுக் காசு.

இவ்வளவு காலமும் யுத்தத்துடன் கிடந்து எப்படியோ சாகாமல் தப்பிய தமது உறவுகள் - இப்பொழுதாவது சந்தோசமாக வாழ்க்கையை அனுபவிக்கட்டுமே என்று கருதும் புலம் பெயர்ந்த தமிழர்கள், காசை அள்ளி இறைக்கிறார்கள். இதன் ஒரு விளைவாக யாழ்ப்பாணத்தில் சைக்கிள் கடைகளில் விற்பனை குறைந்து வருவதாகவும், மோட்டார் சைக்கிள் பாவிப்போரின் தொகை அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

திடீரென்று அனுபவிக்கக் கிடைத்த காசும், திட்டமிடப்படாது நிகழும் துரித கதியிலான பெரு நகரம் மயமாதலின் விளைவாக வந்துகுவியும் நுகர்வுப்பொருட்களின் பெருக்கமும், இள வயதுக் காரர்களின் குழப்பமும் திசை திருப்பப் போதுமானவை.

எனவே, இந்த மூன்று காரணிகளும், ஏனைய சில உபகாரணிகளும் சேர்ந்து உருவாக்கிய யாழ்ப்பாணமே தனது இளைஞர்களில் ஒரு தொகுதியினரைக் கட்டுப்படுத்த இயலாது திணறுவதாகக் கூறப்படுகிறது.

ஆனால், இந்தப் பிரச்சினை ஒரு பிறழ்வாக பார்ப்பதை விடவும், முக்கியமானது அதன் பொருளாதார அடிப்படைகளை விளங்கிக்கொள்வதுதான். பொருளாதார வளர்ச்சியும் வேண்டும்.

பெருநகர மயமாதலும்வேண்டும். அதேசமயம் இவற்றின் நோய்க் கூறான பக்க வளர்ச்சிகள் இயனறளவுக்குக் களையப்படவும் வேணடும்.

இதற்கு முதலில் எல்லாவற்றையும் திட்டமிடவேண்டும், அதற்கு யாழ்ப்பாணத்தில் தற்பொழுது நிகழும் தலைமைத்துவ வெற்றிடம் நிரப்பப்படவேண்டும். அந்த தலைமைத்துவ வெற்றிடத்தை நிரப்புவதென்றால், ஒரு இடைக்கால தன்னாட்சி அமைப்பு தமிழர்களுக்கு தரப்படவேண் டும்.

அதாவது - தமிழர்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் ஒரு நிலையை உருவாக்க வேண்டும்.

தமது பொருளாதார வாழ்வைத் தீர்மானிக்கவும், திட்டமிடவும் அதிகாரமுடைய ஒரு மக்கள் திரளாகத்தான் தமது பண்பாட்டை, கலாசாரத்தைப் பாதுகாக்கவும் முடியும்.

**நிலத்தைப் பிடித்து வைத்'ருக்கவே அவர்கள் அங்கே நிற்கிறார்கள். சனங்களில் விழுமியங் களைப் பாதுகாப்பதற்கல்ல. அப்படி பாதுகாப்பதென்றால் அவர்கள் அந்த நிலத்தை அதன் சொந்தக்காரர்களிடமே திருப்பித் தந்து விட்டுப் போய்விடவேண்டும். எனவே, விழுமியங்களின் சிதைவை அங்குள்ள துருப்புக்கள் ஊக்குவிக்கவும், வளர்க்கவும் இடமுண்டு.**

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் உத்தியோகபூர்வ முடிவுகள்!

| வேட்பாளர் | | மாகாணம் | பெற்ற வாக்கு வீதம் | வாக்கு |
|---|---|---|---|---|
| புஷ் | 254 | 28 | 51% | 58, 037014 |
| கெரி | 252 | 20 | 48% | 54, 489010 |

| மாகாணம் | புஷ் விருப்பு வாக்கு | கெரி விருப்பு வாக்கு | வேட்பாளர் பெற்ற வாக்கு வீதம் | வெற்றி பெற்றவர் |
|---|---|---|---|---|
| அலபாமா | 63% | 37% | 9 | புஷ் |
| அலாங்கா | 62% | 35% | 3 | புஷ் |
| அரிசோனா | 55% | 44% | 10 | புஷ் |
| அர்கன்ஸாஸ் | 54% | 45% | 6 | புஷ் |
| கலிபோர்னியா | 44% | 55% | 55 | கெரி |
| கொலோநடோ | 53% | 46% | 9 | புஷ் |
| கனக்டிகட் | 44% | 54% | 7 | கெரி |
| டெல்வர் | 46% | 53% | 3 | கெரி |
| புலொறிடா | 52% | 47% | 27 | புஷ் |
| ஜோர்ஜியா | 59% | 41% | 15 | புஷ் |
| ஹவாய் | 45% | 54% | 4 | கெரி |
| இடாஹோ | 68% | 30% | 4 | புஷ் |
| இலிநொய்ஸ் | 44% | 55% | 21 | கெரி |
| இந்தியானா | 60% | 39% | 11 | புஷ் |
| அயோவா | 50% | 49% | | |
| கன்சாஸ் | 62% | 36% | 6 | புஷ் |
| ஹென்ரக்கி | 60% | 40% | 8 | புஷ் |
| லூசியான | 57% | 42% | 9 | புஷ் |
| மெய்ன் | 45% | 53% | 4 | கெரி |
| மேரிலண்ட் | 43% | 56% | 10 | கெரி |
| மாசாசு செஸ்ட | 37% | 62% | 12 | கெரி |
| மிசிகன் | 48% | 51% | 17 | கெரி |
| மினசோட்டா | 48% | 51% | 10 | கெரி |
| மிஸிஸிப் பி | 59% | 40% | 6 | புஷ் |
| மிசூர் | 53% | 46% | 11 | புஷ் |
| மான் ரானா | 59% | 39% | 3 | புஷ் |
| நெப்ரஸ்கா | 67% | 32% | 5 | புஷ் |
| நெவாடா | 51 % | 48% | 5 | புஷ் |
| நியூகம்ஸயர் | 49% | 50% | 4 | கெரி |
| நியூ ஜேர்ஸி | 46% | 53% | 15 | கெரி |
| நியூ மெக்சிக்கோ | 50% | 49% | | |
| நியூ யோர்க் | 40% | 58% | 31 | கெரி |
| வட கரோலினா | 56% | 43% | 15 | புஷ் |
| வடடா கோடா | 63% | 36% | 3 | புஷ் |
| ஒகியோ | 51% | 49% | | |
| ஒக்லஹமா | 66% | 34% | 7 | புஷ் |
| ஒறிகன் | 47% | 52% | 7 | கெரி |
| பென்சில்வேனியா | 49% | 51% | 21 | கெரி |
| றோட் தீவு | 39% | 60% | 4 | கெரி |
| தென் கரோலினா | 58% | 41% | 8 | புஷ் |
| தென் டகோட்டா | 60% | 38% | 3 | புஷ் |
| ரென்னசி | 57% | 43% | 11 | புஷ் |
| ரெக்ஸாஸ் | 61% | 38% | 34 | புஷ் |
| உட்டா | 71% | 27% | 5 | புஷ் |
| வேர்மன் ட் | 39% | 59% | 3 | கெரி |
| வேர்சினியா | 54% | 46% | 13 | புஷ் |
| வோசிங்ரன் | 46% | 52% | 11 | கெரி |
| வொசிங்ரன் டி. சி. | 9% | 90% | 3 | கெரி |
| மேற்கு வேர்சினியா | 56% | 43% | 5 | புஷ் |
| விஸ் கொன் சின் | 49% | 50% | 10 | கெரி |
| வியோமிங் | 69% | 29% | 3 | புஷ் |

# ஈராக் எரிபொருள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி சுட்டுக்கொலை

ஈராக்கிய எரிபொருள் அமைச்சகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் சுட்டுக்கொல்லப் பட்டதாக ஈராக் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர் ஹிசைன் அலி-அல் பத்தால் எனவும் இவர் பாக்தாத்திலுள்ள தனது வீட்டிலிருந்து தனது அலுவலகத்திற்கு சென்ற வேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் சுட்டுக்கொல்லப்பட்டமையானது ஈராக் நாட்டின் எரிபொருள் பகுதிக்கு மிகப் பெரிய இழப்பென ஈராக் பேச்சாளரான அசிம் ஜிகாச் தெரிவித்தார். அத்துடன் பல அமைச்சுக்களின் அதிகாரிகளுக்கு கொலை அச்சறுத்தல்கள் வந்தபோதும் இவர் தனது பாதுகாப்பில் அதிக அக்கறை காட்டாமலேயே நடமாடித் திரிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே இந்தத் தாக்குதலின் பின்னர் ஈராக்கின் வடபகுதி நகரான கிர்குக்கில் அமைந்துள்ள ஓயில் வயல்களை கிளர்ச்சிவாதிகள் தாக்கியதனால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் அடுத்த பத்து நாட்களுக்கு இப்பகுதியிலிருந்து எரிபொருள் எதுவும் ஏற்றுமதி செய்யப்படமாட்டாதெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை லெபனானைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட ஒப்பந்தக்காரரான ரடீம் சதீக் என்பவர் பாக்தாத்தில் வைத்து கடத்தப்பட்டுள்ளார்.

பாக்தாத்தில் தங்கியுள்ள இவர் தனது இரண்டு வைத்திய நண்பர்களுக்கு விருந்து கொடுத்துக்கொண்டிருந்தவேளை அங்கு ஆயுதங்களுடன் உட்புகுந்த முகமூடி அணிந்தவர்கள் வைத்தியர் இருவரையும் விட்டுவிட்டு இவரை மட்டும் கடத்திச் சென்றதாக ஈராக் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனுடன் கடந்த திங்கட்கிழமை ஈராக்கில் நடந்த மோதலொன்றின் போது தமது நாட்டுப்



பிரஜையான றொபேட்டோ ரறோன்கோ கடத்தப் பட்டதாக பிலிப்பைன்ஸ் உறுதிப்படுத்தியுள் ளது.

ஈராக்கியப் படைகளின் சிரேஷ்ட அதிகாரியொருவர் சிரச்சேதம் செய்யப்படுவதனை அன்சார் அல் - சுன்னா என்ற அமைப்பு இணையத்தளம் மூலம் நேற்று காட்டியது.

அத்துடன் பாக்தாத்தின் விமானநிலைய வீதியில் சென்றுகொண்டிருந்த அமெரிக்க இராணுவத் தொடரணியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட காக்குண்டுத்தாக்குதலில் பல ஈராக்கியர் காயமடைந்துள்ளனர்.

இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளால் நான்கு ஜோர்தான் நாட்டு சாரதிகள் கடத்தப்பட்டுள் ளனர்.

இவற்றை விட கடந்த இரண்டு வாரத்திற்கு முன்னர் கடத்தப்பட்ட பிரிட்டன் பிரஜை மார்க்கிரட் ஹசன் ஈராக்கிலுள்ள பிரிட்டன் படையினர் 48 மணி நேரத்திற்குள் விலகாவிட்டால் தான் கிளர்ச்சிவாதிகளின் தலைவரான அபு முசாப் அல் சர்காவியிடம் கையளிக்கப்படவுள்ளதாக நேற்றுமுன்தினம் வீடியோ நாடா மூலம் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தான் கராச்சி பள்ளிவாசலில்

# தொழுகையில் ஈடுபட்டோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் ஒருவர் பலி

பாகிஸ்தானின் கராச்சி நகரிலுள்ள பள்ளிவாசல் ஒன்றில் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கராச்சி நகரில் சுனிமுஸ்லீம்கள் வாழும் பகுதியான பன்காலிபறா மாவட்டத்தில் உள்ள முகமதி பள்ளிவாசலில் 250 இற்கும் மேற்பட்டோர் காலைத் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.



வாகனம் ஒன்றில் வந்த துப்பாக்கிதாரிகளில் இருவர் பள்ளிவாசலில் நின்று கைத்துப்பாக்கியால் தொழுகையில் ஈடுபட்டவர்களை நோக்கித் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாக கராச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இத்தாக்குதல் சம்பவம் தீவிரவாதிகளின் செயலாக இருக்கலாம் எனத் தெரிவித்த பொலிஸ் அதிகாரி தனிப்பட்ட விரோதம் காரணமாகவும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்றும் உண்மை நிலையினை கண்டறிந்து கொள்வது கடினமாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை துப்பாக்கிதாரிகள் பிரதான வாசல் ஊடாக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும், அதனை அடுத்து தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடியதாகவும், இச்சம்பவத்திற் காயமடைந்த ஒருவர் தெரிவித்தார்.

அண்மைக்காலமாகப் பாகிஸ்தானில் உள்ள சியா மற்றும் சுனி முஸ்லிம் மதப்பிரிவினர் தமக்கிடையே தாக்குதற் சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுவருகிறது. கடந்த மாதம் கராச்சி நகரில் வைத்து சுனிமுஸ்லீம் மதப்பிரிவுத் தலைவரான முவ்ரி முகமட் ஜமில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அத்துடன் கடந்த ஒகஸ்ட் மாதம் கராச்சி நகரில் உள்ள இரு பள்ளி வாசல்கள் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

# ஐக்கிய அரபு எமிரேட்ஸின் ஜனாதிபதி மரணமடைந்தார்

ஐக்கிய அரபு எமிரேட்சின் ஜனாதிபதியாக கடந்த 33 ஆண்டுகளாகப் பதவிவகித்த ஷேக் சாயட் பின் சுல்தான் அல்நாயன் நேற்று முன்தினம் தனது 86 ஆவது வயதில் மரணமடைந்தார்.

மத்திய கிழக்கு நாடுகளான அபுதாபி, அஜ்மன், டுபாய், புஜாரா, சாஜா, உம் - சல்குவைவன் ஆகிய நாடுகளை இணைத்து 1971 ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தோற்றம் பெற்றதுமுதல் இறக்கும் வரை ஐக்கிய அரபு எமிரேட்சின் ஜனாதிபதியாக ஷேக் சாயிட் பதவி வகித்துவந்தார்.

ஐக்கிய அரபு எமிரேடசின் தந்தையென வாணிக்கப்படும் ஷேக் சாயிட் அரபு எமிரேட்ஸ் மககளால் மிகவும் நேசிக்கப்பட்டவராவார். மரணமடைந்துள்ள ஷேக் சாயிட் தாராள மனம் படைத்தவர் என்றும், மக்களை மிகவும் அன்பாக வழிநடத்தியவர் என்றும், தெரிவித்துள்ள காலீஜ் செய்தி பத்திரிகை ஷேக் சாயிட் அரபு உலகத்தின் ஞானி என ஆசிரியர் தலையங்கத்தை எழுதி கௌரவித்துள்ளது.

உலக நோக்கு

ஷேக் சாயிட்டினது இறுதி நிகழ்வுகள் அபுதாபியிலுள்ள ஷேக் சுல்தான் பள்ளிவாசல் இடம் பெற்றன.

ஷேக் சாயிட்டின் இறுதி மரியாதை செலுத்தும் நிகழ்வில் சவுதிஅரேபியாவின் முடிக்குரிய அரசர் அப்துல்லா உட்பட அரபு நாடுகளின் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டு ராஜதந்திரிகள் பொது மக்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

ஷேக் சாயிட்டின் மரணத்தினை அடுத்து ஐக்கிய அரபு எமிரேட்சில் 40 நாட்கள் துக்கதினமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

அத்துடன் இவரது உயிரிழப்பிற்கு துக்கம் தெரிவிக்கும் முகமாக ஐக்கிய அரபு எமிரேட்சில் உள்ள பாடசாலைகள் மற்றும் அரசாங்க அலுவலகங்கள் யாவும் எட்டு நாட்களுக்கு மூடப்பட்டுள்ளன. அத்துடன் தனியார் நிறுவனங்களும் மூன்று நாட்களுக்கு மூடப்பட்டுள்ளன.


நிறஞ்சனாஸ் சங்கானை
ராஜ்கிரன் நடித்த
கொஞ்சிப்பேசலாம் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே) (சி-2723)
DARE DRAVIN
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45, (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
3 ஆவது ஜனத்திரள் வாரம்
கடைசிவாரம்
ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த
7/G றெயின்போ காலனி
இது ஒரு உண்மைக் கதை
பு.நே 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்
ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம் (C-3319)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த

அரசாட்சி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
குளிரூட்டப்பட்டது
தேவயானி நடித்த
பாரதி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.30, 6.30, 9.30 (பு.நே) (சி-3319)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45, (பு.நே)


யாழ்ப்பாணத்தின் சமகாலம் நிழலாக அரங்கில்...!
அம்பலம் சஞ்சிகைக்காக..... கு. பிரபாகரனின்.....
3 நாடகங்கள்
07.11.2004 (ஞாயிறு)
யாழ் பல்கலை. கைலாசபதி கலையரங்கு
▷ மண்மூடும் கவடுகள்
▷ கபாடம் திறமின்
▷ மேன்மக்கள்
காட்சிகள் மு.ப 9.30
பி.ப 12.30
பி.ப 3.30
நுழைவு - 100/= 50/= 20/=


விளம்பர அனுசரணை - நமது ஈழநாடு

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

### ராஜபக்சவின் சார்பில்

# சட்டத்தரணி நியமிக்காததால் விசாரணைகள் ஒத்திவைப்பு



காணாமற்போனோர் தொடர்பான ஆறு வழக்குகளின் எதிர்மனுதாரராக குறிப்பிடப்பட்ட லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ தனது சார்பில் சட்டத்தரணி ஒருவரை நியமிக்காத காரணத்தினால் மேற்படி வழக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஒத்திவைக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பாக யாழ்.மேல் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட 48 வழக்குகளில் 6 வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த வழக்கில் பரமு சந்திரசேகரம், லோகேஸ்வரன் சேரன், சுப்பிரமணியம் சுதாகர், நாகமுத்து செல்வரத்தினம், பூதத்தம்பி யதீஸ்குமார் ஆகியோரின் வழக்குகளின் எதிர்மனு தாரர்களாக கிருஷாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ மற்றும் செம்மணி வழக்கில் முக்கிய சந்தேக நபர்களாக கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட கப்டன் லலிதகுமார, முன்னாள் இராணுவத்தளபதி லயனல் பலகல்ல ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இவர்களில் லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ நீதிமன்றில் ஆஜரான போதும் தமது வழக்குகளில் ஆஜராவதற்கு இது வரை சட்டத்தரணி ஒருவரை நியமிக்காத காரணத்தால் மேற்படி வழக்குகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது.

அதுவரை ராஜபக்ஷவை யாழ் சிறைச்சாலையில் தடுத்துவைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். நேற்று மனுதாரர்கள் சார்பில் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தினால் சட்டத்தரணி எம். றெமீடியஸ் ஆஜராகியிருந்தார்.

ராஜபக்ஷவின் வழக்குகளில் சட்டத்தரணி ஒருவரை நியமிக்க யாழ் மனித உரிமை ஆணைக்குழுவின் உதவி நாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# அமைச்சரவை முடிவுகள் எதையும் ஊடகங்களுக்கு வழங்கக்கூடாது!

## ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

அமைச்சரவைத் தீர்மானங்களையும் அங்கு பேசப்படும் விடயங்களையும் எந்தவொரு ஊடகங்களுக்கும் தெரிவிக்கக் கூடாது என ஜனாதிபதி சந்திரிகா கண்டிப்பாக உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்ற வேளையில் அமைச்சர் டி.எம்.ஜயரட்ன இது தொடர்பான பிரச்சினையை முன்வைத்தார். அமைச்சரவைத் தீர்மானங்களை ஊடகங்களுக்கு வழங்குவதற்கென அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர நியமிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய அமைச்சர்கள் அமைச்சரவைத் தீர்மானங்களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்துவதனால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுவதாக அவர் தெரிவித்தார். இதனையடுத்தே ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்ட உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

# அமெரிக்க ஜனாதிபதியாக...

ஆனால், ஜனநாயகக் கட்சியினர் தாம் தோல்வியடைந்து விட்டதான தகவலை மறுத்ததுடன், இன்னமும் எண்ணப்படாமல் ஒகியோ மாகாணத்திலுள்ள 20 தேர்தல் பிரிவில் வாக்குகள் எண்ணப்படும் போது தாம் வெற்றி பெறுவோம் எனத் தெரிவித்தனர்.

தற்போது வெளிவந்த முடிவுகளின் படி ஜோர்ஜ் புஷ் 254 இடங்களையும், ஹெரி 252 இடங்களையும் பெற்றுள்ளனர்.

ஒகியோ மாகாணத்தில் எண்ணப்படாத வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டால் சிலவேளைகளில் ஹெரி வெல்லக்கூடிய சாத்தியங்கள் உள்ளதாகவும், ஆனாலும் இந்த வாக்குகளின் முடிவுகள் எவ்வாறு அமையுமென கூறமுடியாதிருப்பதாக செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இரண்டு மாநிலங்களவையின் தேர்தல் முடிவுகள் வெளிவரவுள்ள நிலையில் இதுவும் பெரிதாக முடிவெதனையும் மாற்றாதெனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அயோவா மாநிலத்திலுள்ள இரண்டு சிறிய வாக்களிப்பு நிலையங்களில் வாக்கெண்ணும் இயந்திரங்கள் பழுதடைந்துள்ளதால் அப்பகுதிக்கான தேர்தல் முடிவுகள் வெளிவர ஒருநாள் தாமதமாகும். இதனுடன் புதிய மெக்ஸிக்கோ முடிவுகளும் இதுவரை வெளிவரவில்லை.

இந்த வருடம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் 115 மில்லியன் வாக்காளர்கள் வாக்களித்துள்ளனா. இது 2000 ஆம் ஆண்டு வாக்களித்த வாக்காளரைவிட 10 மில்லியன் கூடுதலெனத் தெரிவிக்கபடுகிறது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் ஜோர்ஜ் புஷ்ஷே அதி கூடிய வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றவராக இருப்பாரென அமெரிக்க அதிகாரி அன்ட்ரு காட் தெரிவித்தார்.

ஒகியோ வாக்குகளும் எண்ணப்படுமிடத்து புஷ் 286 இடங்களைப் பெறுவாரெனவும், இவர் ஏற்கனவே 35 லட்சம் வாக்குகளைப் பெற்றுளாரெனவும் 1988 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பார்த்தால் புஷ்ஷே கூடுதல் வாக்குகளைப் பெற்றவராகிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுடன் இணைந்ததாக அமெரிக்க காங்கிரஸ், மற்றும் மாகாண ஆளுநர்களுக்குமான தெரிவுகளும் இடம் பெற்றுள்ளன. இதில் குடியரசுக் கட்சி அமெரிக்க செனட்டில் தனது பிடியை இறுக்கி வருகின்றது. இதில் ஜனநாயகக் கட்சித் தலைவர் ரொம் டாசில் தென் மாகாணத்தில் தோல்வியடைந்துள்ளார்.

அத்துடன் குடியரசுக்கட்சி தென் மாநிலங்களில் தொடர்ந்து வெற்றி பெற்று வருகின்றது.

## இறுதித்...

வும், பல இலட்சம் மக்கள் நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்துள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகள் வன்முறைகளைக் கைவிட்டு உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் திரும்பவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேசமயம் அமெரிக்க ராஜாங்கப் பிரதிச் செயலர் ஆர்மிரேச் எதிர் வரும் வாரத்தில் இலங்கைக்கு வருகைதர உள்ளார்.

## ஆளுநர்...

துக்கு விஜயம் செய்யவில்லை. அரச அதிகாரிகளையும் சந்தித்ததாகவும் தகவல் எதுவும் வெளியாகவில்லை.

ஆளுநரின் விஜயத்துக்கு குடாநாட்டு பொது அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் - அவர் வெளிப்படையாக விஜயத்தை மேற்கொள்ளாமல், இரகசிய விஜயத்தை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

# ரோக்கியோ, ஒஸ்லோ...

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாடுகளுடன் இணைந்து ஒஸ்லோ பிரகடனத்தை ஏற்குமாறு நிபந்தனைகளை விதித்தது. ஆனால் ஏற்கனவே ஒஸ்லோ பிரகடனத்தை நாம் நிராகரித்ததுடன் இது சமாதான முயற்சிகளுக்கு ஒரு நியாயப்படுத்த முடியாத தேவையில்லாத தலையீடு எனவும் தெரிவித்திருந்தோம்.

2003 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் திகதி விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வத் தகவல்களின்படி - ரணில் விக்கிரமசிங்க அரசு இந்த நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க சர்வதேச வலைப் பின்னலொன்றைத் தனது பாதுகாப்பிற்கு ஏற்படுத்தியிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் ஒஸ்லோவில் வெளியிடப்பட்டது பத்திரிகைச் செய்தியே தவிர பிரகடனமல்ல என்பதனை பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கூட ஒத்துக்கொண்டுள்ளார். இந்த அறிக்கை மூன்று கட்டப் பேச்சுக்களின் முடிவிலேயே வெளியிடப்பட்டதென்பதனையும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் உள்ளக சுயாட்சி அடிப்படையில் சமஷ்டி முறையில் அரசியற் தீர்வொன்றினைக் காண்பதற்கு இரண்டு பகுதியினரும் இணங்கியேயுள்ளனர். அத்துடன் ஒஸ்லோ உதவி மாநாடான 25 நவம்பர் 2002 இற்குப்பின் எவ்வித வன்செயல்களுமற்ற வகையில் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதென இரு பகுதியினரும் உடன்பட்டனர்.

ஆனால் இதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் அரசியற் தீர்விற்கு மேற்கூறப்பட்ட மூன்று விடயங்களை ஏற்க முடியாதவாறு முன்வைத்தனர். ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தையென்பது வெளியாரின் எவ்வித அழுத்தமும் இல்லாமலே நடைபெற வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# மீட்புநிதி சான்றிதழைத் தவறவிட்டோர் விபரங்களை அறிந்துகொள்ள ஏற்பாடு!

தமிழீழ மீட்புநிதிக்கடன் சான்றிதழைத் தவறவிட்டோர், 2004 ஆம் ஆண்டுக்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலில் தமது பெயர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதா என்பதை அறிந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

அடையாள ஆவணத்துடன் கீழ்காணும் நேர அட்டவணைக்கிணங்க வருகைதந்து 2004 ஆம் ஆண்டுக்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலைப் பார்வையிட்டுத் தமது தெரிவை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **06.11.2004 (சனிக்கிழமை)** | | | |
| அரசியற்துறைச் செயலகம் | - மானிப்பாய் | காலை | 08.30 - 10.00 மணி |
| அரசியற்துறைச் செயலகம் | - சண்டிலிப்பாய் | முற்பகல் | 10.30 - 12.00 மணி |
| அரசியற்துறைச் செயலகம் | - சுன்னாகம் | பிற்பகல் | 12.30 - 02.00 மணி |
| அரசியற்துறைச் செயலகம் | - நீர்வேலி | பிற்பகல் | 03.30 - 04.30 மணி |
| **07.11.2004 (ஞாயிற்றுக்கிழமை)** | | | |
| அரசியற்துறைச் செயலகம் | - வல்வெட்டித்துறை | காலை | 08.30 -10.00 மணி |
| அரசியற்துறைச் செயலகம் | - 2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை | முற்பகல் | 10.30 - 12.00 மணி |
| அரசியற்துறைச் செயலகம் | - வதிரி | பிற்பகல் | 01.00 - 02.00 மணி |
| அரசியற்துறைச் செயலகம் | - வடமராட்சி கிழக்கு | பிற்பகல் | 03.00 - 03.30 மணி |
| **08.11.2004 (திங்கட்கிழமை)** | | | |
| அரசியற்துறைச் செயலகம் | - கைதடி | காலை | 08.30 - 09.30 மணி |
| அரசியற்துறைச் செயலகம் | - சங்கத்தானை | முற்பகல் | 10.30 - 12.00 மணி |
| அரசியற்துறைச் செயலகம் | - நல்லூர் | பிற்பகல் | 03.30 - 04.30 மணி |
| **09.11.2004 (செவ்வாய்க்கிழமை)** | | | |
| அரசியற்துறைச் செயலகம் | - வேலணை | காலை | 08.30 - 09.00 மணி |
| வீரசிங்கம் மண்டபம் | - யாழ்ப்பாணம் | முற்பகல் | 11.30 - 01.00 மணி |
| **10.11.2004 (புதன்கிழமை)** | | | |
| மத்திய கல்லூரி | - கிளிநொச்சி | பிற்பகல் | 02.45 - 04.00 மண |

UNIT

IBM, Microsoft, Sun Micro Systems, Cisco, Compaq, AT & T Labs, Intel மற்றும் HP நிறுவனங்களின் இணைத் தயாரிப்பு நிறுவனங்களில் நேரடியாக இணைத் தயாரிப்பில் ஈடுபட்டவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் இந்நிறுவனத்தை நிறுவியுள்ளோம். கணனி துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி விற்பனை மற்றும் பழுது நீக்குதல், வலைப்பின்னலமைப்பு ஏற்படுத்துதல் மென்பொருள் உற்பத்தி, கணனி உதிரிப் பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவையுடன் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு வழங்குகின்றோம்.

3 வருட முழு உத்தரவாதம்

விலை குறைவு என்பதற்காக தரம் குறைந்தவையல்ல தரம் மிகமிக உயர்ந்தவை

*Attractive Opening Offer each computer purchase has*

எல்லாமே Hybrid Boost, Hypher Thread, Dual Monitor வசதிகளுடன்

★ Computer Table ★ Filter ★ Dust Cover ★ Mouse Pad & etc.

எமது சேவைகள் பல அவற்றுள் சில :

- எவராலும் தீர்க்க முடியாத கணனிப் பிரச்சினைகளை பழுது பார்த்தல், நீக்குதல்
- சகல விதமான கணனிகளின் பழுது பார்த்தல் மற்றும் பழுது நீக்குதல்
- Cisco நிறுவனத்தின் அனுமதி பெற்ற வலையமைப்புக்கள் மற்றும் திருத்தங்கள்
- LAN, WAN, MAN வலைப் பின்னலமைப்புகள், பழுது பார்த்தல் மற்றும் பழுது நீக்குதல்

இன்னும் பல .....

We delivers cheap & the best products Because We are entirely different from others

விசேட சலுகைப் பொதிகள்

- புதிய Multimedia Pentium IV கணனிகள் Rs. 40,000/= முதல் மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
- புதிய Multimedia Compaq Pentium III கணனிகள் Rs. 25,000/= முதல் ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
- புதிய Multimedia Compaq Pentium II கணனிகள் Rs. 13,000/= முதல் ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

நிபந்தனைக்குட்பட்டது. இச்சலுகை 3, 4 & 5 திகதிகள் மட்டுமே

Universal Network of Information Technology
347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.